அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

மலர்: 7 இதழ் 12 விலை அ. 4	மன்மத ௵ பங்குனி௴ மார்ச்-ஏப்ரல்—1956	வருட சந்தா ரூ. 2-4-0

ஐந்தெழுந்தை ஓதி, உள்ளத்தால் சுந்தரரை உபாசித்து
பேரருட் கயிலை சேர்ந்த பெருமிழலைக் குறும்பர்.

(பெரிய புராணச் சித்திர விளக்கம் 24; பக்கம் 532)

பொருளடக்கம்

			பக்கம்
1.	கலை விருக்ஷம்	(திருப்புகழ் மணி)	... 529
2.	பெருமிழலைக் குறும்ப நாயனார்	(கி. வா. ஜகந்நாதன்)	... 532
3.	ஆடுவோனைக் கூடும் உபாயம்	(ராமலிங்கம் பிள்ளை, பேட்டை)	... 534
4.	பக்திக் கடல்	(ஆ. கி. ரங்கராஜன்)	... 537
5.	சேவலும் மயிலும்	(எம். பி. தியாகராஜன்)	... 539
6.	அருள் பெற வழி	(மு. ப. சுப்பையா)	... 542
7.	அருணகிரியும் ஐம்பூதத் தலங்களும்	(திருப்புகழ் சதுரர் சே. த. இராமலிங்கம் பிள்ளை B.A.B.T.,)	545
8.	மங்களா சாஸனம்	(அன்பன்)	... 550
9.	கந்தர் அநுபூதி	(கி. வா. ஜ.)	... 553
10.	அமிருத மொழி	(ஸ்ரீவத்ஸ ஸோமதேவ சர்மா)	... 556
11.	திருமுருகன் திருவிளையாடல்	(V.R.G.)	... 560
12.	கயல் கண்ணியார்	(ரசபதி)	... 563
13.	தீபாராதனை	(சி. வி. சுப்ரமண்யம்)	... 572
14.	Gold Mines	*(Thiruppugal Mani)*	... 574

அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரை மீ முதல் பங்குனி மீ முடிய வருடச் சந்தா உள் நாட்டிற்கு இலங்கை உள்பட ரூ. 2—4—0. நான்கு வருடச் சந்தா ரூ. 8—4—0. அயல் நாடுகளுக்கு வருடச் சந்தா 4 ஷில்லிங்குகள். நான்கு வருடச் சந்தா 15 ஷில்லிங்குகள். போஸ்டல் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னமேயே மன்மத ஆண்டிற்கு உரிய தங்கள் சந்தாத் தொகை 2—4—0ம் அனுப்பினால் தொடர்ந்து பத்திரிகை அனுப்பப் பெறும். வருஷத்தின் நடுவில் சந்தாச் செலுத்தினால், சித்திரைமீ முதல் உள்ள முன் பகுதிகள் கைவசம் இருப்பதை உத்தேசித்து, சந்தாதாரர்களாகச் சேர்க்கவோ மறுக்கவோ நேரும். ஆகையால், ஆண்டு பிறப்பதன் முன் சந்தா செலுத்துவதே நலம்.

அமிர்தவசனி, 54, பந்தர் தெரு, சென்னை.

அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை.

ஆசிரியர்: சு. முத்துஸ்வாமி

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே

மலர் 7	மன்மத ஹூ பங்குனி மீ மார்ச்—ஏப்ரல் - 1956	இதழ் 12

கலை விருக்ஷம்

(திருப்புகழ் மணி)

"ஐவகை யெனும் பூதமாதியை வகுத்து, அதனுள் அசரசர பேதமான யாவையும் வகுத்து, நல்லறிவையும் வகுத்து, மறையாதி நூலையும் வகுத்து, சைவமுதலாம் அளவில் சமயமும் வகுத்து, மேற்சமயம் கடந்த மோன சமரசம் வகுத்த நீ—உன்னை யான் அணுகவும் தண்ணருள் வகுக்க விலையோ" என்று பாடினர் தாயுமானவர்.

தெய்வம் தண்ணருள் ரூபமாக இருப்பதால், அந்தத் தண்ணருளே சிருஷ்டியில் இரண்டுவகையான வித்தையாகப் பரிணமித்தது போலும். உபநிஷத்துக்களில் சொல்லியவாறு வித்தை, 'பர' வித்தை, 'அபர' வித்தை யென்ற இருவகை யாகும். பர வித்தை பிரம்ம சாக்ஷாத்காரமென்றும், அபர வித்தை பிரம்மமே ஊடுருவி நிற்கின்ற மற்ற ஏனைய கலைகளும் என்று

நிச்சலமாம் சித்தமொடு நின்னடியைச் சிந்திக்கும்
இச்சை நிறைவுறுவ(து) என்றோ இறையோனே.

கூறப்படுகிறது. அபர வித்தைகளாகிய அறுபத்தி ணுலு கலைகளும் பிரம்ம வித்தையில் உபாசகனைக் கொண்டு போய்ச் சேர்க்கும்.

"மன்னுகலை துன்னுபொருள் மறைநான்கும் வான்சரடாத்
தன்னையே கோவணமாச் சாத்தினன்காண் சாழலோ"

என்று மணிவாசகப் பெருமான் போதித்தார்.

சிருஷ்டியின் திருவிளையாட்டைச் சேர்ந்தது இது.

"அறிவும் அறியாமையும் கடந்த அறிவு திருமேனி யென்று
உன் அருண சரணாரவிந்த மென்று அடைவேனோ"

என்ருர் அருணகிரி.

உணர்ச்சி உள்ளடங்கி, உணர்ச்சிக்குக் காரண மாகி நிற்கும் ஜடப் பொருள்களெல்லாம் அறியாமை யென்றும், ப்ரகிருதியென்றும் சொல்லப்படும் பிரும மத்தின் ஓர் பண்பின் விமரிசனம்தான்.

அறியாமை உள்ளடங்கி அறிவு என்னும் தத்து வம் மேலோங்கி நிற்றலினுல் உலகில் அறிவாளி களாய் விளங்கும் ஜீவன்களைக் காண்கின்ருேம். அறி யாமையும் ஓர் அறிவுதான். அறிந்ததும் ஓர் அறிவு தான். ஆகவே அறிவும் அறியாமையும் கடந்த அறிவு ஈசன் திருமேனி என்ருர். ஆகவே அறிவில் அறி யாமையும், அறியாமையில் அறிவுமாய் உலகில் கலந்து நிற்பதால், வெளிமுகமாய் ஜடமுகமாய் ஓடுகின்ற அறி வெல்லாம் அறுபத்திஞலு கலைகளாகவும், உள்முக மாய் நின்ற அறிவு ஏகமாய், எல்லாவற்றையும் ஊடு ருவி நிற்கின்ற பரஞானம், ப்ரக்ஞானம் என்றும் ப்ரம்ம ஞானம் என்றும் கூறப்படுகிறது.

மயில்மிசை ஏறிவரும் மால்மகளின் உள்ளமகிழ்
அயில்வேல் கரனேஎன் அகம்களிக்க வாராயோ.

ஸ்ருஷ்டியின் வாயிலாய் ப்ரம்மத்தை அடைவது கலைகள் காட்டும் வழி. ப்ரம்மத்தை உணர்ந்தவர்கள் கலைகளை உணர்ந்தவராவர். ப்ரம்மமே கலைகளின் உயிர். கலைகளை நாடுபவர் கலையின் உயிரை எது வென்று தெரிந்து கொள்ள வேண்டும்.

'ஐந்து பூதமும் ஆறுசமயமும்
மந்த்ர வேத புராண கலைகளும்''

ஐம்பதோர் விதமான லிபிகளும், வெகு ரூப அண்டராதி சராசரமும், உயர் புண்டரீகனும் மேக நிறவனும், அந்தி போல் உருவானும், நிலவொடு வெயில் காயும் சந்திர சூரியர் தாமும், அஜபையும், விந்து நாதமும் ஏக வடிவமும் தன் சொருபமதாக வளர்வது 'சிவயோகம்' என்றுர் திருப்புகழில். சர்வ ஜீவன்களும் சர்வ ஜடங்களும் அடங்கிய தெய்வ சிருஷ்டி தெய்வப் பொருளேதான். ஆகவே, அறிவும் கலைகளும் தெய்வ இயற்கையின் விலாஸமே தான். அறியும் பொருளாகவும், அறிவாம் உணர்ச்சியாகவும் ஞானிகள் தெய்வத்தை உணர்ந்திருக்கின்றுர்கள்.

கலைகளின் கவர்ச்சி தெய்வீக லக்ஷணங்களின் செயல். லக்ஷிய ஜடப் பொருள்கள் உருமாறிவிடும். லக்ஷணங்கள் எப்போதும் உரு இழந்தாலும் மாருது. தெய்வீகத் தன்மையான நித்தியத்தில் நிற்கும். கலைகளின் கவர்ச்சி ஜீவாத்தும பரமாத்தும ஆகர்ஷணமாகும். கலைப் பயிற்சியின் முடிவு தெய்வீக ததாம்மியம். தெய்வத்தோடு ஒன்றிவிடுவது. ஆதலால் பக்திக்குக் கலைகள் பெரிய ஆதாரம். எல்லாக் கலைகளும்

செல்வக் குமரேசா செய்யதிரு மேனியனே
செல்வம் தழைத்தோங்கச் சித்தம் இரங்குதியோ.

தென்னாட்டுக் கோயில்களில் பொதிந்து கிடப்பதை அறியாதார் யார்? கலையின் முதலும், இடையும், முடிவுமாய் நிறைவது தெய்வீக இயல்புதான். கம்பர் சிருஷ்டித்த கலை விருக்ஷம் அரிது, அரிது.

"ஏகம் முதல் கல்வி முளைத்தெழுந்து எண்ணில் கேள்வி
ஆகும் முதல் திண்பணை போக்கி அருந் தவத்தின்
சாகம் தழைத்து அன்பு அரும்பி தருமம் மலர்ந்து
போகக் கனியொன்று பழுத்தது போலு மன்றே"

பெரியபுராண சித்திர விளக்கம் 24

பெருமிழலைக்குறும்ப நாயனர்

(கி. வா. ஜகந்நாதன்.)

சோழ நாட்டின் ஒரு பகுதி மிழலை நாடு. அதன் தலைநகர் மிழலை. அதைப் பெருமிழலை யென்றும் வழங்குவர். தொண்டரும் சான்றோரும் நிறைந்த பதி அது. அந்தப் பழைய ஊரில் குறும்பனர் என்ற அடியார் வாழ்ந்து வந்தார். ஆண்டவனிடத்தில் இடையரு த அன்பும் அடியார்களுடைய உறவில் ஆர்வமும் உடைய பெரியார் அவர்.

அடியவர்கள் வந்தால் அவர்களை எதிர்கொண்டு சென்று அழைத்து வந்து உபசாரம் செய்வார். அவர்களுக்கு இன்னபொருள் வேண்டுமென்பதை அவர்கள் சொல்லு முன்பே குறிப்பினல் அறிந்து உதவுவார். வேண்டிய ஏவல்களைச் செய்வார்.

அடிக்கடி தொண்டர்கள் பலர் அவரை நாடி வருவார்கள். அவர்களுக்கு அறுசுவை உண்டி வழங்குவதோடு வேண்டிய பொருளையும் வழங்குவார். இறைவன் திருவருளை இறவாத பெருஞ் செல்வம் என்று மெய்யுணர்வு வரப்பெற்றவராக விளங்கினர் அவர்.

சாதகநின் கஞ்சமலர்த் தாளே சரணங்காண்
ஆதங்கம் நீக்கியெனை ஆளுதியோ ஆளாயோ.

திருத்தொண்டர்களிடத்தில் பேரன்புடையவராக இருந்த அவருக்குப் பழந்தொண்டர்களைப் பாடி உலகுக்குத் திருத்தொண்டத் தொகை என்ற பதிகத்தை வழங்கிய சுந்தரமூர்த்தி சுவாமிகளிடத்தில் அளவற்ற பக்தி உண்டாயிற்று. எப்போதும் அப்பெருமானுடைய புகழைப் பேசியும் நினைந்தும் இன்புற்றார். அவரைச் சென்று தரிசனம் செய்து வந்து எப்போதும் அவரைத் தியானம் பண்ணியபடியே இருந்தார். இறைவன் திருவருளைப் பெறச் சுந்தரமூர்த்தி சுவாமிகளிடம் பக்தி செய்தலே சிறந்த வழி என்ற உறுதியோடு வாழ்ந்தார். அந்த உபாஸனையின் பலத்தால் அவருக்கு அட்டமா சித்திகளும் கைவந்தன. இறைவனுடைய திருவைந்தெழுத்தையே எல்லாமாக எண்ணித் தவம் புரிந்தார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அவ்வப்போது எவ்வெவ்விடத்தில் இருந்து என்ன என்ன செய்து வருகிறார் என்பதைப் பெருமிழலைக் குறும்ப நாயனார் உணர்ந்து கொண்டு வந்தார். சுந்தரர் திருவஞ்சைக் களம் சென்று அங்கிருந்தபடியே கயிலாயம் செல்லப் போகிறார் என்பதையும் தம்முடைய உள்ளுணர்வால் அவர் அறிந்தார். 'சுந்தரர் வாழாத மண்ணில் வாழ என் மனம் பொருந்தாது. அப்பெருமான் திருக்கயிலை சேர்வதற்கு முன் நான் யோக நெறியால் அங்கே செல்வேன்' என்ற எண்ணம் அவர்பால் மூண்டது.

யோகம் கைவரப் பெற்றவராதலின் பிரமரந்திரத்தின் வழியே கருத்தைச் செலுத்திக் கபால நடுவின்வழியே உயிர் இந்தச் சடலத்தைவிட்டுப் பிரியும் வண்ணம் செய்து திருக்கயிலையை அடைந்தார். இறைவனுடைய பக்தியைக் காட்டிலும் அடியாரிடம் உள்ள பக்தி எய்தற்கரிய சித்திகளைப் பெறும்படிச் செய்யும் என்பதற்குப் பெருமிழலைக் குறும்ப நாயனார் வாழ்க்கை சிறந்த சான்றாகும்.

சித்திகள் கைவரப்பெற்றாலும் அவற்றால் தருக்குற்று உலகினரை மயக்கித் திரியாமல், இறைவரது பஞ்சாட்சரத்தையும், சுந்தரரது திருத்தாளையும் போற்றி வாழ்ந்தது அவருடைய பெருமையைக் காட்டும். ★

சாதுஜன போஷணச் சம்பத்தும் நின்சலசப்
பாதத் திடையருப் பத்தியுமே தாராயோ.

ஆடுவோனைக் கூடும் உபாயம்

(ராமலிங்கம் பிள்ளை, பேட்டை)

"ஆடுவோன்" என்பது எல்லா உயிருக்கும் இன்பம் நிலவும் பொருட்டுத் தில்லையம்பலத்தில் எல்லையில் திரு நடனம் என்றும் ஆடும் பரமனையே குறிக்கும். இறைவனின் திரு நடனமே "எல்லையில் தனிப்பெருங் கூத்து" என்று விதந்தோதப்பட்ட பெருமை உடையதாகும்.

ஓய்விலாதாடும் ஒருவனை மாயுமியல்புடைய மாந்தர் தோயுமாறு எங்ஙனம் என முன்னோர் மொழி கொண்டு உன்னி உணர்வாம்.

சாதாரணமாகவே ஒருவன் ஆடலைக் கொண்டிருக்கின்றான் என்றால், அசைவற்று நிற்கும் ஒருவன் அவனைக் கூடுதல் முடியாது. ஆடுவோனைப் பின்பற்றித் தொடர்ந்து சென்று கொண்டிருந்தால்தான் கூடும் வாய்ப்புக் கிட்டுவது நிச்சயம். இடையே விட்டுப் பிரிந்தால் எவ்வாற்றானும் முடியாது. மேலும் ஆடுவோனைப் பின்தொடர்வோன் கூவியழைத்துக் கொண்டே செல்ல வேண்டுவதும் அவசியமாகும். ஏனெனில் ஆடுவோன் தன் நாட்டம் எப்பக்கமும் இயைந்து நிற்பதைத் தன்பால் சிறிது திருப்பக் கூறிக் குரலோசை எழுப்புவது இன்றியமையாததாம். இன்னும் அவ்வோசை இசையோடு கூடிய பாடலாக இருத்தல் மிக மிக இனிதாம். எம்மிறைவன் ஏழிசையாயும் இசைப் பயனுமிருப்பவனாகலின் என்க.

"கூடிய விலயச்சதி பிழையாமை, கொடியிடை யுமையவள் காண ஆடிய அழகன்" அவன்.

அவனே "பாட்டுக்கும் ஆட்டுக்கும் பண்பனுவான்; பாட்டுக் குருகும் பரமனுமாவான்.

நெஞ்சத்தொருமைமதி கொண்டார்முன் னின்றருளும்
கஞ்சமலர்ச் சேவடியைக் காதலிக்கக் காணேனே.

இறுமாப்பினால் மலையை எடுக்கலுற்ற இராவணனுக்கும் அவன் பாடிய இசைக்கிரங்கி நாளும் வாளும் நன்கருள் செய்தான் நம்மிறைவன். இதுபற்றியே இறைவன்பால் உள்ளத்தை இணைக்க வேண்டுமென நெஞ்சை முன்னிலைப்படுத்தி நமது சமய குரவர்கள் நன்குணர்த்தியருளினர்.

" ஆடுகின்றிலை கூத்துடையான் கழற்கன்பிலை என்புருகிப்
பாடுகின்றிலை பதைப்பதும் செய்கிலை பணிகிலை பாதமலர்
சூடுகின்றிலை சூட்டுகின்றதுமிலை துணையிலை பிணநெஞ்சே
தேடுகின்றிலை தெருவுதோறலறிலை செய்வதொன் றறியேனே.
—(திருவாசகம்)

"பாட்டுக்குருகும் பண்பா போற்றி"
"பாடுவார் பாட லுகப்பாய் போற்றி"
"ஆடிப்பாடி அண்ணாமலை கை தொழ,
ஓடிப்போகும் நமக்குள்ள வினைகளே"
—(அப்பர்சுவாமிகள்)

"வீடு பெற லெளிதாம் அதனை வினவுதிரேல்,
காடிடமாக நின்று கனலேந்திக் கைவீசி,
ஆடும் அவிர்சடையான் அவன்மேவும் ஆரூரைப்
பாடுதல் கை தொழுதல் பணிதல் கருமமே."
—(திருஞானசம்பந்த சுவாமிகள்)

இவ்வுரைகளின் இனிய பண்புக்கேற்ப முன்னோரை வரும் பாடியாடியே பரமனருள் கூடினமையும், பயனார் பணியும், அடியார்பால் அணுகிய இன்னல்களை அகற்றி அருள் செய்த தன்மையும்:—

1. ஊமைப் பெண் பேசி யுய்ந்தமையும்;

2. சமண இருள் நீங்கிச் சைவம் நிலைபெற அனல் வாதம் புனல் வாதம் செய்து ஆக்கம் பெற்றமையும்;

3. சிறந்த நங்கையின் என்பும் சாம்பலும் எழிலுருவாகிப் பெற்று எழுந்த வாய்ப்பும்;

சாணவயிற்றைக் காக்கச் சந்ததமும் பாடுபடும்
வீண்வழியில் நிற்றல் விதியோ மதியோனே.

4. மடுவில் முதலையால் விழுங்கப் பெற்ற மைந்தன் கடுக உயிர்பெற்றெழுந்த கவினும்;

5. விடத்தால் மாண்ட விடலை மைந்தன் உடனிருந் தருந்த உயிர்பெற் றெழுந்ததும்

என்பன பலவும் கனிந்த தமிழ்ப் பாடலின் கையுறு பயனைப் மையுற கண்டன் மாண்பருளாமே.

எனவே ஆடுவோனைக் கூடற்கான உபாயம் உள்ளம் உருகிப் பாடுதலும், அதில் இனிது திளைத்த பெற்றியால் எங்கெங்கும் அவன் புகழே இடையறாது சிந்தித்துப் பேசி அடியார் குழுவுடன் ஆடலுமே என்பது தெளிவு.

"மேவினோம் அவனடியா ரடியா ரோடும்
மேன்மேலும் குடைந்தாடி யாடுவோமே.

—(திருவாசகம்)

பாடுவன் பாடுவன் பார்ப்பதி தன்னடி பற்றி நான்
தேடுவன் தேடுவன் திண்ணெனப் பற்றிச் செறிதர
ஆடுவன் ஆடுவன் ஆமாத்தூரெம் மடிகளைக்
கூடுவன் கூடுவன் குற்றமதற்றென் குறிப்போடே.

—(சுந்தரர்)

பாடவேண்டும் நான்போற்றி நின்னையே
பாடி நைந்துநைந்து தருகிநெக்குநெக்
காடவேண்டு நான் போற்றி யம்பலத்
தாடு நின்கழற் போது நாயினேன்
கூடவேண்டு நான் போற்றி யிப்புழுக்
கூடு நீக்கெனைப் போற்றி பொய்யெலாம்
வீடவேண்டும் நான் போற்றி வீடுதந்
தருளு போற்றிநின் மெய்யர் மெய்யனே.

—(திருவாசகம்)

இதுகாறும் கூறிய முன்னோர் மொழிகளால் ஆடுவோனைக்கூடும் உபாயமாவது, நாடோறும் பாடியாடிப் பரவிப். பணி செய்து வாடி நிற்பதே அருள் பெறும் வாய்ப்பாம் என்பது புலனும்.

சண்முகனே ஞான சக்திதரா சற்குருவாய்
எண்முகமா என்னுள் எழுந்தருளல் செய்யாயோ.

பக்திக் கடல்

[ஆ. கி. ரங்கராஜன்]

பக்திக் கடல்! ஆம். பக்திக் கடலேதான். அமுத ஸாகரனும் ஆலவாயனும் அரிய சேவைதரும் அற்புத க்ஷேத்திரமாகிய திருக்குடந்தையிலே ஜனஸமுத்திரம் ஆர்த்தெழுந்து பக்திக் கடலுடன் கலந்து அருட்கடலாகிய ஆண்டவனின் கருணை ஸமுத்திரத்தில் கூடி ஆனந்தம் என்னும் மாபெரும் பிரளயமாகப் பொங்கியது!

பாமரரையும் பண்டிதரையும் ஒன்றுக்கும் சக்தி பக்தியின் சக்திதான். ஆண்டியையும் அரசனையும் கூட்டி வைக்கும் சக்தி பக்தியின் சக்திதான். கோபியைக் குணமுள்ளவனாக்குவதும் அறிவிலியை ஞானியாக்குவதும் பக்தியின் சக்திதான். இத்தகைய சக்தியே இறைவனைச் சேரவும் அடிகோலுகிறது.

மகாமகம் என்னும் சம்ப்ரம விழாவிலே மேற்குறித்த செய்தி நிகழ்ந்தது. அன்று மக்கள் சமயப் பூசல்களாகிய வழக்குகளை விடுத்து, மதுசூதனனும் மதியணிந்தோனும் ஒரு நிலையத்தினரே என்பதை உணர்ந்தனர்.

மகாமகம் பன்னிரண்டு ஆண்டுகட்கோர் முறை நிகழ்வதாம். ஆத்ம கோடிகள் உய்யக் கருதி இறைவன் நிகழ்த்தும் உற்சவமே மகாமகம்.

மூவுலகையும் அழிக்கும் மூன்றுவது பிரளயத்திற்குப் பின் முதன் முதலாகத் தோன்றிய க்ஷேத்திரமே திருக்குடந்தையாம். கனற்கண்ணனின் கருணையால் ஏற்பட்ட அந்நகரில் அமுதவாவிகள் இரண்டு. ஒன்று மகத்தடம். அடுத்தது பொற்றாமரைத் தடம்.

ஆநந்தம் நின்மேனி என்பார்கள் அந்த
ஆநந்தம் யானடையு அடியேற் கருளுதியோ.

நான்முகன் நம்பனும் கும்பேசனையும் அம்பிகையாம் மங்கள நாயகியையும் ஒருங்கே கூட்டிப் பவனிவரச் செய்து மகத்தடத்தை அவர்கட்கு உரிமையாக்கினன்.

நாரணனை உதைத்த பிருகு முனிவர் ஹேமரிஷியாய்த் தோன்றி இறைவனைப் பிரார்த்திக்கையில், நாரணனை வெறுத்த திருமகள் மீண்டும் அவனை அடையவேண்டி, மற்றொரு தடத்தில் பொற்றாமரை மலர அதில் மகவாய்த் தோன்றி, ஹேம முனிவர் 'கோமளவல்லி' என அழைக்க வளர்ந்து, ஸாரங்கதரனும் ஆராத அமுதனை அடைந்து அப் பொற்றாமரைத் தடாகத்தை அச்சுதனுக்கு அளித்தனள்.

பதிதரின் பாபங்கள் பற்றியதால் தம் வனப்பையும் ஒளியையும் இழந்த நவநதி மங்கையர் கண்ணுதலோனைப் பிரார்த்திக்க, அவன் இட்ட கட்டளைப்படி, மாசி மாதத்தில் பன்னிரு ஆண்டுகட்கோர் முறை நிகழ்வதாகிய மகாமகம் என்னும் புனிதத் திருநாளில், ஸிம்ம ராசியில் தேவ குருவும், அழகியாம் மக நக்ஷத்திர மங்கையுடன் கூடிய பூரண சந்திரனும், கும்பராசியில் கதிரவனும் நின்று பரஸ்பரம் கண்டுகளிக்கும் அரியசந்தர்ப்பத்தில், மகத்தடத்தின் அமுத நீராடித் தங்கள் வினை நீங்கிக் காசி விஸ்வேசனின் ராமதாரக மந்திரோபதேசம் பெற்று, மீண்டும் தங்கள் தேஜஸைப் பெற்றனர்.

அறியாது செய்தோரின் பாபங்கள் அன்று அத்தடத்தில் மூழ்குவதால் அகலுமென அருமறைகள் அறைகின்றன.

அமரர்கள் அனைவரும் திருக்குடந்தையில் வாசம் புரிகின்றனர். ஆதித்தன் ஹரியின் ஆழியையும் (சக்ராயுதம்), ஆதிசேடன் ஆலவாயனையும் பூஜித்து அரும்பேறு பெற்றனர். மூர்க்க நாயனர் முக்தி பெற்றதும், ஆழ்வாராதியர் அச்சுதனின் அரிய காக்ஷியைக் கண்டதும் திருக்குடந்தை க்ஷேத்ரமேயாம்.

குழந்தை வடிவேலா கும்பிடுவார்க் கின்பம்
வழங்கும் அருளுன்னி வழுத்த அருளாயோ.

இத்தலத்தில் வாழ்ந்து முக்தி பெற்றவர் அநேகர். காரணம் யாதெனின், இத்தலம் சகல தர்மங்கட்கும் பிறப்பிடமாயது. தர்மிஷ்டர் வாழ்வது. சகல வளங்களும் பொருந்தியது. இரு நதிகளுக்கிடையே இருப்பது. பாபிகளையும் பக்தராக்குவது. ஒரு முறை இந்த க்ஷேத்திரத்தில் அடி வைக்கும் போதே அவர்கட்கு ஆனந்தத்தை அளிப்பது.

இத்தகைய மஹோன்னதத் திருக்குடந்தைப் பதியிலே பக்திக் கடல் பொங்கியது எனில் விந்தை என்ன? ஆனந்தத் தாண்டவம் புரியும் அம்பலவாணனும் அமுத கும்பேசனும், ஆழியிடையே அரவணையில் துயிலும் அச்சுதனும் ஆராத அமுதனும் அற்புத சேவை தரும் திருக்குடந்தையைப் பார்க்கும்போதே பாபங்கள் அகலும். முக்திக்குரிய வழி சித்திக்கும்.

வாழ்க திருக்குடந்தை! ஓங்குக அதன் கீர்த்தி!

சேவலும் மயிலும்

(எம். பி. தியாகராஜன்)

சேவலும் மயிலும் சூரனின் அங்கமிரு கூறான பரிணம உருவங்களென்பதும், அவைகள் அறுமுகக்கடவுளின் அருகிலிருக்கும் அருள் பெற்றவைக ளென்றும் சைவ சமய அன்பர்களுக்குத் தெரிந்த உண்மையே. சேவல் வேலவரின் திருக்கரத்திருக்கும் அறிவின் சின்னமென விளங்கு மென்பதை யுணர்ந்தவர்கள், அப் புல்லினத்தை எவ்வாறு போற்ற வேண்டு மென்பதை யுணர்வார்கள். சூரனென்றாலே வல்லவனென்னும் பொது அர்த்தமிருப்பினும், சூரபத்மனையே விசேஷமாகக் குறிக்கும். சூரன்

வடிவேல் எடுத்தென் ஆணவத்தை மாய்த்தருளாய்
அடியேன் உனக்கபயம் வாவா அளியோனே.

பதுமன் என்ற இருவரும் ஈருயிரும் ஓருடலுமாக சூரபது மனென அவதரித்ததாக அவர்களுடைய சரித்திரம் கூறு கிறது. சூரபதுமன் சிவனை நோக்கிக் கடுந்தவம் புரிந்து தவ வலிமை பூண்டு சிவ சக்தியல்லது வேறு எவராலும் அழிக்கப்படாத வரமும் பெற்றனன். நெருப்பின் சக் தியை, நாம் நமக்கு உணவைப் பக்குவப்படுத்தவும் உப யோகிக்கலாம்; அல்லது நம்மையே அச்சக்திக்கு உணவாக் கவும் முடியும். அது போன்றதே சிவபெருமானின் அருட் சக்தியுமாகும். சூரபதுமன் அச்சக்தியை சித்த சுத்தி இல்லாது பெற்றமையின் அதைக்கொண்டு தேவர்களுக் கும் இன்னல் விளைவிக்க முற்பட்டனன். இறைவழிபாட்டி லீடுபடுமுன் சித்த சுத்தி அடைய வேண்டிய சரியை கிரியா மார்க்கத்தி லீடுபட வேண்டும். சித்த சுத்தி ஏற் பட்டவர்களே ஞான நூல்களைப் படிக்கும் அதிகாரம் பெற்றவர்க ளென்பதின் கருத்து மிதுவே யாகும். சித்த சுத்தியாவது, தம்முடைய தீய காரியங்களினால் விளைந்த கன்ம மலங்களை சிவ புண்ணிய கருமங்களினால் போக்கு வதே யாகும். "புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு" என்று திருமூலர் கூறுவதையும் ஈண்டு கவ னிக்கத் தகுந்த விஷயமாகும்.

சூரபதுமனின் அங்கத்திலிருந்து வெளிப்பட்ட இரு கூறுகளுமே ஜீவ உபாதிகளுக்கும் உலகத் தோற்றத்திற் கும் காரணமாக விளங்குகின்றன என்னும் உண்மையை, போரிவாழ் ஆறுமா முகக் கடவுள் சிவப்பிரகாச சுவாமி களுக்கு உபதேசித்ததாக அவர்களுடைய பாடல்களில் காணலாம். சேவல் அறிவுச் சின்னமாய் ஒளியையே விரும் பும் பட்சியென, ஆறுமுகக் கடவுளின் வெற்றிக் கொடி யாக உயர்ந்து நிற்கும் தன்மையில் விளங்குகிறது. மயில் நினைவின் சின்னமென அசைவின் தன்மையையும், இரு ளையே விரும்பும் பான்மையையும் உணர்த்தி, ஆறுமுகக்

காக்கக் கடவியநீ காவா திருந்தக்கால்
ஆர்க்கும் மலவலி யென்ஐயா நிற்கடைக்கலமே.

கடவுளைத் தாங்கி அமைதியுறும். அவ்வறிவும் நினைவும் மிசிரிம்பித்து எவ்வாறு அரும்பெரும் ஜகத்துக்கே ஏது வாக விளங்குகின்றன என்பதைப் பின்வரும் பாடலால் சிதம்பர சுவாமிகள் நன்கு விளக்குகிறார்கள்.

"அறிவு தன்நினைவினிற் கலந்துறு போதில்
அரும்பரம் உயிர் சகம் உளவாம்
மறிவிலவ் வறிவந் நினைவினை யகன்றால்
பேதா பேதங்க ளொன்றின்றி
நெறியுறத் தானே தன்னிடத் திருக்கும்
நிச்சய மென்றெனக் கிசைத்தான்
பொறிமறு மார்பன் முருகவே ளெனையாள்
போரிவாழ் ஆறுமா முகனே."

ஆகாயத்தினிடத்து காற்றின் சலனமேற்படுவது போல் அறிவின் சலனமே நினைவாக விளங்குகிறது. அந் நினைவினை அறிவு கலந்திடில் அல்லது அபிமானிக்கில், அவ் வபிமானங் காரணமாகப் பரமென்றும், ஜகமென்றும் பல் வேறு பேதங்கள் தோன்றப்பட்டு, அமைதி குலைந்து அல் லல் விளைகிறது. எப்படி சொப்பன உலகத்தில், சொப்ப னம் காணும்போது நம்முடைய நினைப்பே பல தோற்றங் களுக்குக் காரணமாயிருந்து, தோற்ற உருவங்களை நினை விற்கு வேறாக மதித்து, அவைகளின் மூலம் இன்பத் தையோ துன்பத்தையோ அனுபவிக்கிறோமோ, அது போல் அமைவதே இவ்வுலகமும். நினைவின் வழியே அறிவின் ஆற்றல் வயப்படாதிருப்பின், அறிவுதானே தன்னிடத்திருக்கும் என்பது மேற்படி பாடலின் உப தேசப் பொருளாகும். இதுவே பரனது நினைவிற்கும் ஜீவ எண்ணங்களுக்கும் உள்ள வேறுபாடாகும்.

சூரபன்மனுடைய உருவமைப்பு இரு உயிர் கொண் டுள்ளது என்பது, அறிவும் நினைவும் மிசிரிம்பித்து பல அல் லல்களை விளைவிக்கும் ஜீவ அமைப்பை உணர்த்துகிறது.

நெஞ்சே! குமரன் நிற்காக்க நேர்வருவான்
அஞ்சாதே! என்றும் அவனை யழைத்தியரோ.

அந்த உருவம் திருமுருகன் ஆயுதங்களால் பல முகத்தோடு மாறி மாறி தோன்றிற்றென்பது, பல ஜன்மங்கள் மூலம் ஜீவ ஆன்மாக்கள் பண்பாட்டைத் தலையுணர்த்துகின்றது. ஞானமொன்றினால் மட்டுமே அந்த அறிவு நினைவினைப் பிரிந்து தானே தன் வசத்திருக்க ஆன்மாவிற்கு அமைதி ஏற்பட்டு, பிறப்பிறப்பொழியு மென்பதை, சக்திவேல் கொண்டு முருகப் பெருமான் சூரனுடைய அங்கத்தை இரு கூறாக்க, அவ்வுருவம் சேவலும் மயிலுமாக அப்பெருமானுக்குக் கொடியாகவும் வாகனமாகவும் அமைக்கப் பெற்று, அழியாப்பேறு எய்திற்று என்பது உணர்த்துகிறது.

அருள் பெற வழி

(மு. ப. சுப்பையா.)

சித்திரை மாதம் பௌர்ணமிக்கு இரண்டாம் நாள். அதிர்வெடி முழக்கம் அதிகாலையில் கேட்டது. கந்தன் எழுந்து நீராடி நித்திய கடனை முடித்துக் கொண்டு கோயிலுக்குச் செல்கிறான். கடவுளை வணங்கிவிட்டுத் திரும்பினான் வீட்டிற்கு; உள்ளே நுழைந்தான்; குழந்தை யழுதது. தோட்டத்திற்குச் சென்றிருந்த மனைவி வந்து குழந்தையை யெடுத்துப் பால் கொடுக்கக் கண்டான். தூரத்திலிருந்து ஓரொலி இசை நயத்துடன் அவன் காதுக்கெட்டியது. உற்றுக் கேட்கிறான். "அழுதா லுன்னைப் பெறலாமே" என்னுந் தொடர் அவன் செவி வாயிலாக நெஞ்சிற்பாய்ந்து தங்கிற்று. நிலைத்து நின்றான். எண்ணிப் பார்க்கிறான்:— என்ன இது! பஜனை! மணிவாசகர் திருவாக்கு. ஆண்டவனையா பெறலாம்? ஆண்டவன் ஆனந்த வடிவமுடையவனயிற்றே! என்றும் இன்பமுற அழுவதா? அழுதாற் பயன் என்ன? அழுகைக்கும் ஆநந்தத்திற்கும் என்ன சம்பந்தம்?

ஆறு முகமருந்து ஆகுலம்தீர்க் கும்மருந்து
சீறுபிணி தீர்க்கும் செம்மருந்து செவ்வேளே.

இந்த நிலையில் எதிரே தன் குழந்தை பால் குடித்து விளையாடும் காட்சி அவன் மனத்தை யிழுத்தது. "அழுத குழந்தை அன்னையின் அன்பு கலந்த அமுதத்தை அருந்து கிறது. 'அழுத பிள்ளை பால் குடிக்கு'மென்பது சரிதான். ஆண்டவனிடம் அழுதால் அருளாகிய அமிர்தம் கிடைக் குமா? ஏன் கிடைக்காது? வாதவூரர் பொய்யையா வாய் மலர்ந்தருளுவார்? கிடைக்கும். அழுது அமுது உண்டவ ரல்லவா திருஞான சம்பந்தர்! காரணமின்றியா அழுவது? ஐயனை நினைக்குங்கால் எப்படி அழுகை வரும்? ஆனந்த மன்றோ பெருகும்?" என்று நினைத்த வண்ணமாகவே தெருத் திண்ணைக்கு வந்தான்.

பஜனைக் கூட்டம் நெருங்கியது. ஒரன்பர் "ஆடுகின் றிலை யழுகிலை தொழுகிலை!' யென்று தொடங்கிப் பாடு கிறார். இந்தத் தொடரிலேயே தன் கருத்தை நிலை நிறுத் தினான் கந்தன். "என்ன புதுமை! தொழுகைக்கு முன்னே அழுகை வேண்டுமாமே! என்ன நினைத்து அழுவது?" என் பன போன்ற எண்ணங்கள் ஒன்றன் பின் ஒன்றாக கடலில் அலைகள்போலப் பொங்கி யெழுந்தன. மற்றொரு பஜனையில் ஒரன்பர் திருத்தாண்டக மிசைக்கிறார்:—

குலம் பொல்லேன் குணம் பொல்லேன் குறியும் பொல்லேன்
குற்றமே பெரிதுடையேன் கோலமாய
நலம் பொல்லேன் நான் பொல்லேன் ஞானியல்லேன்
நல்லாரோ டிசைந்திலேன் நடுவே நின்ற
விலங்கல்லேன் விலங்கலா தொழிந்தே னல்லேன்
வெறுப்பனவும் மிகப் பெரிதும் பேச வல்லேன்
இலம்பொல்லேன் இரப்பதே ஈயமாட்டேன்
என் செய்வான் தோன்றினேன் ஏழையேனே.

ஆகா! கந்தன் நெஞ்சங் குளிர்ந்தது; உணர்ச்சி யோங் கிற்று. உன்னிப் பார்க்கிறான்:—நமது குறைகளையும் குற் றங்களையும் கடவுளிடம் முறையிட்டால் ஏன் அழுகை

வராது? மனங் கசியாது? 'நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார்' என்பது மெய்தான். உடனே திண்ணையை விட்டிறங்கினன். சிறிது தூரம் சென்றதும் ஆங்கொரு சொற்பொழிவாளரது சொன்மாரி காதில் விழுந்தது; கொஞ்ச நேரம் நின்றான்.

"என்னே ஆண்டவனது அருள்! உடல், கருவிகள், உலகப் பொருள்கள், இன்ப நலம் முதலிய உதவிகளையும் கைம்மாறு வேண்டாது கொடுத்திருக்கும் வள்ளலின் கருணையே கருணை. இத்தனை நாள் இவற்றை ஒரு சிறிதேனும் நினைத்திருந்தால், இறைவன் பால் நன்றி செலுத்துங் காரணமாகவேனும் அன்பு கொண்டு அழுதிருப்போமே! இதனலல்லவா "நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து அன்பே நிறைந்து நிறைந்து ஊற்றெழுங் கண்ணீரதனல் உடம்பு நனைந்து நனைந்து" என்றார் இராமலிங்க சுவாமிகள்! ஆனந்த வீட்டிற்கொரு சிறந்த வழி அழுகையென்பதை அறியாமற் போனேமே" என்று பலவாறு சிந்தனை செய்கிறான்.

இதற்குள் பிரசங்கியாரும் முடிவுரை கூறுகிறார்:— "தனக்குக் கடவுள் செய்திருக்கும்—செய்யும் நன்றிகளை ஒவ்வொன்றாக ஒவ்வொரு மனிதனும் நினைத்துப் பார்த்தால், பக்தியென்பது தானே முளைத்து வளர்ந்து தழைத்துப் பூத்துக் காய்த்துக் கனிந்துவிடும். இது கருதியே தான் புற மதத்தினரும் பாவத்தை அறிக்கை யிடுதல் வேண்டுமென்று சொல்கிறார்கள்" என்ற அவர் வாக்கியங்கள், கந்தனுடைய எண்ணங்களுக்கு ஒரு எல்லை காண உதவின.

"நாம் கடவுளிடம் பெற்றிருக்கும் பிரதிப் பிரயோஜனம் வேண்டாத உதவிகளையும், நன்றி கொன்ற நிலையில் ஆண்டவனை மறந்து செய்யும் குற்றங்களையும் நினைந்து நினைந்து அழுது முறையிட்டால் ஆனந்தம் பெறலாம்—

சம்பந்தம் தந்தருளும் சண்முக சிவாநந்தம்
எம்பந்தம் தீர்க்கும் எழில்மருத்துச் சாலையதே.

அருள் பெறலாம். இதுவே உண்மையான பிராயச்சித்தமு மாகும். துன்பமே இன்பத்துக்கு வழி. அழுது அடியடைந்த அன்பர் சிகாமணியாகிய மாணிக்கவாசகரே இதற்குச் சான்றுவார்" என்னும் தீர்மானத்தோடு, பஜனை செய்துவந்த மெய்யன்பர்களை வாயார வாழ்த்திவிட்டு இல்லத்திற்கு வந்தான் கந்தன்.

அருணகிரியும் ஐம்பூதத் தலங்களும்

(திருப்புகழ் சதுரர் சே. த. இராமலிங்கம் பிள்ளை.)

(493ஆம் பக்கத் தொடர்ச்சி)

திரு அண்ணுமலை :

இது தேயு என்னும் அக்கினித் தலமாகும். இந்தத் தலம் அறந்தரு நாவுக்கரசும் ஆலால சுந்தரரும் பிறந்தருளளதாகும் பேறுபெற்ற நடு நாடென்னும் திரு முனைப் பாடி நாட்டது. ஆளுடைய பிள்ளையும் அப்பரடிகளும் ஆளுடைய அடிகளுமாகிய மூவர் பாடல் கொண்ட சிறப்பினது. விராட் புருடனுக்கு மணி பூரகமானது. மூன்றுவது ஆதாரத்தலம். எங்கே இருந்தும் அன்பாக 'அண்ணுமலை' என்று நினைக்க முத்தி யுதவுவது.



" தில்லையைக் காணக் காசியிலிறக்க சிறக்கும் ஆரூர்தனிற் பிறக்க
எல்லையில் அருணகிரிதனை நினைக்க எய்தலாம் முத்தி."

" நினைத்துத் தொழுவார் பாவந்தீர்க்கும் நிமலருறை கோயில்"
(சம்பந்தர்)

பெயர்க் காரணம் :

ஒரு சர்வ சம்மாரப் பிரளயம் முடிந்ததும், சிவனர், திரும்பவும் உலகம் தோன்ற வேண்டுமென்று திருவுளம் பற்றினர். உடனே ஐந்தொழிலாற்றும் அதிபர்களாகிய அயன், அரி, அரன் மகேசனுதியர் தோன்றினர். அப்போது அசைவன அசையாதனவாகிய இருவகைப் பிரபஞ்சங்களையும் படைக்கும் கடப்பாடுடைய பிரமன், அத் தொழிலைச் செய்து அதனல் பெருஞ் செருக்குற்றனன். அவன் காக்குங் கடவுளாகிய கடல் வண்ணனைக் கண்டு, "மாலே! அனைத்துலகங்களும் அவற்றிலமைந்த உயிர்களும் எனது படைப்பினல் நேர்ந்தவை என்பதறிவாயாக. 'சுவரிலாது எழுது சித்திரமும் உண்டோ?' அதுபோல் நான் படைக்கவில்லை என்னில் உனது காக்கும் தொழில் எப்படி நடைபெறும்? நீயே காப்பேன் என்றும் பகற் கனவு காணுதே. நான் விரும்பினல் உன் தொழிலைச் செய்ய மற்றொருவனைப் படைப்பேன்" என்றுன். இக் கடுஞ் சொற்களைக் கேட்ட நெடுமால் நெருப்பெழக் கொதித்து, "பேதாய்! அரனர் உன் தலைகளி லொன்றைக் கிள்ளி எறிந்து நாட்பல நடந்தன. இன்னும் அதை ஆக்கிக் கொள்ளும் ஆற்றலிலாத நீ, உன்னைத் தலைவனுக எண்ணித் தருக்குதல் தகுமோ? சோமுகன் உனது வேதங்களைப் பிடுங்கிப் பாதலத் தொளிக்க, நான் மீனுகி அவனைக் கொன்று அவற்றை வாங்கி உதவினேன். பல்வேறு அசுரர் அல்லல்களினின்றும் உன்னைப் பாதுகாத்தேன். இச் சகத்திலுள்ளோர் எட்டி மரமானுலும் பச்சென்றிருக்கப் பகர்வர். ஆதலின் என் மகனை நீ தீயினும் கொடியவனயினும் உன்னைக் கொல்ல விரும்பிலேன் என்றூர்.

முதலில் இவ்வாறு வாய்ச் சண்டையாய்த் தொடங்கியது கைச் சண்டையாக மாறியது. இதனல் விண்ணவர் வேதனையுற்றனர். மண்ணவர் வருந்தினர். எண்திசைக்

ஓங்கார உள்பொருளே ஓதுகலை நாதனென்றும்
காங்கேயா என்னைக் கரையேற்றிக் காவாயோ.

காவலரும் ஏங்கித் தவித்தனர். இறுதியாக அமரர்களனை வரும் அமரேசனோடு கைலையுற்றுக் கண்ணுதல் பரம னிடம் முறையிட்டனர். முதல்வரும் இப் போரின் அடிப்படை இதுவென அறிந்து, 'அடுக்கியிடும் புவன மெலாம் அடுக்கு அழியா திருக்க மனத்து அருள்வ தாகித் தடுக்கரிய தழலுருவத்து ஒருவரையாய் (மாசி மாதம் தேய்பிறை சதுர்த்தசி நள்ளிரவில்) இருவரையும் தடுப்ப தானர். அந்நாள் 'சோதி அனலா உதித்த சோணகிரி' யான திருநாள். அது 'மகா சிவராத்திரி' எனப்படும். இதனைக் கண்ட அரியும் அயனும் அந்த அழல் மலையின் அளக்க லாகா அளவும் பெருமையும் சிந்தித்து இம் மலையின் அடி முடி என்பவற்றை அறிபவரே பெரியவராவர் என்று முடிவு கட்டினர். உடனே நெடுமால் இம் மலையின் அடி யினை அறிவேனென்று நீலவராகமாய் நிலங்கிண்டு சென்ற னர். அயனும் இதன் முடியைக் காண்பேன் என்று அன் னப் பறவையாகி ஆகாயத்திற் பறக்கலுற்றான்.

நிலங்கிண்ட நெடுமால் பன்னாள்காறும் தேடிக் காணு மல் 'அடியைக் காணும் ஆற்றலில்லேன்' என வருந்தி மீண் டனர். பூவினுறு போதன், பொன்னுடு முதலிய நன்னுடு பல கடந்து அனல் மலையின் சோதி முடி காணப் பெருது திரும்பினன். ஆனல் தோல்வியை ஒப்புக் கொள்ள மனமில்லாமல், சிவனர் முடியினின்றிரங்கிய ஒரு தாழம் பூவைப் பொய்ச் சான்று புகலச்செய்து தான் முடியினைக் கண்டதாக நாரணனிடம் நவின்றான். உடனே நெருப்பு மலை வெடித்தது. செல்வானத்தொளி மழுங்கியது. முருக் கிதழும் கறுத்தது. பவள மேனியில் தவள நீறு துலங்கப் பரமசிவன், முப்புரஞ் செற்ற நகை முகத்திலெழ எழுந் தருளினர். அவர் 'நீதியில்லா போதனே! நீ தருக்கிச் சொன்ன பொய் வார்த்தை நன்றாயுள்ளது' என நகை செய்தனர். அது கண்ட பிரமனுக்கு அகந்தை இருள் கால்

பக்திப் பெருக்குற்றுன் பாதமதைப் போற்றிசெய
சக்தி மிகஅருள்நீ சத்திவடி வேலோனே.

வாங்கி ஓடியது. திருமால் முகத்தில் மகிழ்ச்சி மலர்ந்தது. விண்ணோர் மலர்மாரி சொரிந்தனர். திருமால் சிந்தை அகந்தை சிதறிப் போகப் பரமனைக் கனிந்து பரவினர். சிவனர் திருமாலுக்கருளி பிரமனைப் பார்த்து 'மலரோனே! பொய்ம்மை புகன்று நின்னையே மதித்தனை மிகவும். ஆதலின் நினக்கு இங் நீள் நிலத்தில் தனியே கோவிலும் வழிபாடும் இல்லாதொழிக. பொய்க்கரி புகன்ற தாழையும் இனி நம் பூசைக்கு ஆகா'தென அறைந்தனர். பிரமன் மிக வருந்திப் பரமனைப் பன்முறைப் பரவித் தன் பிழை பொறுக்க வேண்டினன். அண்ணலும் அங்ஙனமே அருள் சுரந்தார்.

மேலே கூறியாங்கு, சோதியான அனல் மலையின் அடி முடி காண அயனும் அரியும் மேலுற எழுந்தும் மிகக் கீழே அகழ்ந்தும் அண்ணு (எட்ட முடியாத) மலையாயினமையின் இத் தலம் அண்ணுமலை எனப் பேர் பெற்றது.

"மாலறியா நான்முகனும் காணுமலை"

(மணிவாசகர்)

"விளவார் கனி படநூறிய கடல் வண்ணனும் வேதக்
கிளர்தாமரை மலர் மேலுறை கேடில் புகழோனும்
அளவாவணம் அழலாகிய அண்ணுமலை அண்ணல்
தளராமுலை முறுவல் உமை தலைவன் னடி சரணே"

(சம்பந்தர்)

"மாலு நான்முகனும் கூடிக் காண்கிலா வகையுள் நின்றாய்
ஆலு நீர் கொண்டல் பூசும் அணி அண்ணு மலையுளானே"

(அப்பர்)

"என்னிகரெவரும் இல்லென்று இருவரும் இகலும் எல்லை
அன்னவர் நடுவு தோன்றி அடிமுடி தெரியாதாகி
உன்னினர் தங்கட்கெல்லாம் ஒல்லையின் முத்தி நல்கித்
தன்னிக ரின்றி நின்ற தழல் பெரும் சயிலம்"

(கச்சியப்ப சிவாசாரியர்)

இவ்வருமை வரலாற்றை நம் அருணகிரியார்;

என்குறையைத் தீர்க்க எவருளர் இவ் வையகத்தில்
நின்கருணை தானதனை நீக்குமெனல் ஓர்ந்தேனே.

"திருமுடி பார்த்திடுமென இருவர்க்கு
அடி தலை தெரியாப்படி நின்(று) அருணச்
சிவ சுடர் சிகி காட்டவன் இரு செவியிற் புகல்வோனே"

(இம் மலையின்) திருமுடியையும் அடியையும் பார்த்திடுவோம் என்று (செருக்குடன்) கூறிய இருவர்க்கு அடி முடி தெரியாதபடி நின்ற செந்நிறமுடைய சிவசுடராகிய நெருப்பு விழி நிமலற்குப் பெருமை மிக்க (வலச்) செவியில் உபதேசித்தவனே] என்றும்,

திருமால் கமலப் பிரமா விழியில்
தெரியா அரனுக்கு—அரியோனே
செழுநீர் வயல் சுற்றருணபுரியில்
திரு வீதியினில்—பெருமாளே

என்றும் கூறுவதைக் காணலாம்.

வரலாறு கூறும் வாய்மை:

இவ் வரலாற்றைச் சமயப் பூசற்குரியதாகக் கொள்ளக் கூடாது. இதில் பங்கு கொள்பவர்கள் திருமாலும் பிரமதேவருமாகும். திருமால் திரு என்னும் செல்வத்தில் சிறந்தவர். நான்முகர் கல்வி என்னும் கலாவல்லி நாயகர். இருவரும் செருக்குற்றார் என்பது செல்வத்தாலும் கல்வியாலும் செருக்கு வரும் என்பதும், அப்போது இருவராலும் ஆண்டவனை அடைய முடியாது என்பதே இதனால் உணர்த்தப்பட்டதென அறிக.

ஊசித் துளையில் ஒட்டகம் புகுந்தாலும் புகும். ஆனால் பணக்காரன் பரலோகம் பெறுவது அரிது என்ற விவிலியப் பொன்னுரை ஈண்டு நினைக்கத் தக்கது.

(தொடரும்)

பார்வையால் எந்தன் பரிபவங்கள் போக்கியருள்
பார்வதியார் பாலா பரம கருணையனே.

திருப்பல்லாண்டு 11

மங்களா சாஸனம்

(அன்பன்)

ஸ்ரீ வல்லப தேவர், மதுரையை ஆண்ட மன்னர். சிறந்த அரண்மனைப் புரோகிதர் செல்வ நம்பி. அவர் திருக்கோட்டியூரில் அவதரித்தவர். என்னுடன் புனித நட்புப் பூண்டவர். கலைக்கடலின் கரையைக் கண்டவர். தூய மன்னரிடம் தொடர்புண்டாக்கி, பரந்தாமா! பல்லாண்டு நின்மேல் பாடவைத்த பரம ஞானி அவர்.

அழியும் இத்தேகமேதான் ஆத்மா: இதற்கு அயலாக ஆன்மா என்ற ஒன்று இல்லை. இங்ஙனம் சிலர் இடிமுழக்கம் செய்வர்.

ஆதிகேசவன்தன் அடிமை நான் என்று அறியும் அறிவு இல்லாமல், தானே சுதந்தரன் என்று தருக்குகின்றார் சிலர்.

தேவதைகளை எல்லாம் எம்பிராற்குச் சமமாக எண்ணுகின்ரார் சிலர்.

அமலன் இடத்தில் அற்பப் பயனை எதிர்பார்க்கும் ஏழை மதியர் சிலர் இருக்கின்றார்.

வீடு பேற்றிற்கு உரிய உபாய வழி யிவை யென்று, சாதனைகள் பலவற்றிற் சார்கின்றாரும் உளர்.

மன சாட்சியைக் குழிதோண்டி மறைத்து, ஆஸ்திகப் போர்வையில் இருந்து ஆரவாரிப்பாரும் சிலர்.

பால் தரும் பசுவைப் புலியென்று பயந்து, விரட்டி அதனைத் தம்மிலிருந்து விலக்கி, புலியைப் பசு என்று எண்ணி வாலுருவி உறவாடி, பாழும் விதியின் கைப்பட்டுப் பல்லிளிப்பாரும் பலர்.

இதய உறவினரை ஐயுற்று, உதட்டு உறவினரில் உறவாடி கூடா உவகை கொள்பவரும் பலர்.

அல்வழக்கு என்னும் அநியாயமான இவைகட்கு அயலானவர் செல்வநம்பி. வியாபகமான பொருளை விஷ்ணு என்று விளம்புவர். வித்தக அப்பொருளில் சித்தம் வைத்தவரே வைஷ்ணவர். பரம அக் கொள்கையில் பற்று மிக்கவர் அப் பட்டர்.

நான்படும் துன்பங்கள நாவொன்றால் சொல்லவொணு
ஏன்படுகின் றுயென்றே எதிர்மொழிய வாராயோ.

பாவத்தால் வளர்ந்த முனைப்புப் பாழ்பட, அச்சுதா! அவரைப் போல் அடியேனும் நின் பழந் தொண்டன் ஆயினேன்.

மாபெரும் மங்கல மாதவா! நாடெல்லாம் நலம்பெற, உன் எட்டெழுத்தைப் பரம இதயத்தில் பதித்தேன். இனிய நாமம் பல வற்றால் உன்னை இடையறாது ஏத்தினேன். மாபெருந் தெய்வமான உனக்கு மங்களா சாஸனம் பண்ணுகிறேன். இப்பேறு எனக்கு என்றும் நேர இனிது அருள் என்று, பாடும் பெரியாழ்வார் பாடலே பாடல். ஸ்ரீ வைஷ்ணவ லட்சணத்தையும், அதன் கொள்கை களையும், வெள்ளிடை மலைபோல் விளக்கும் அப் பாசுரத்தைப் பாருங்கள்!

அல்வழக்(கு) ஒன்றுமில்லா அணிகோட்டியர் கோன், அபிமான துங்கன்
செல்வனைப் போலத் திருமாலே! நானும் உனக்குப் பழ அடியேன்!
நல்வகையால் நமோ நாராயணா என்று நாமம் பல பரவி,
பல்வகையாலும் பவித்திரனே! உன்னைப் பல்லாண்டு கூறுவனே!

(பொ - ரை.) அநீதி ஒன்றும் இல்லாத அழகிய திருக்கோட்டியூரின் தலைவர்; சமய அன்பின் சால்புடையவர் (ஆன) செல்வ நம்பியைப்போல், திரு மகள் மணாளா! அடியேனும் உனக்குத் தொன்று தொட்ட தொண்டன் ஆயி னேன்; எவர்க்கும் நலம் விளைய நமோநாராயணா என்னும் திருமந்திரத்தை உட் கொண்டு, (உனது) பல நாமங்களையும் பாடி, எந்த வகையால் நோக்கினாலும் மாபெரும் தூய்மையுள்ள மாதவா! உனக்கே பரம மங்களா சாஸனம் பண்ணு வன், (எ - று).

உள்ளம் பாய்ந்து, உணர்வை நயமாக்கும் இப்பாசுரத்தைப் போல் உதவுவார் இவ்வுலகில் எவர்?

அருமைப் பாண்டி நாட்டின் ஒரு பகுதியை ஆண்டவள் அல்லி. மற்றொரு பகுதியை ஆண்டவள் மல்லி. மல்லியின் மகன் வில்லி. வில்லி புதுக்கிய ஊர் ஸ்ரீ வில்லிபுத்தூர்.

அரிய அப்பகுதியில் அவதரித்தார். செம்மைத் திருமாலைச் சித்தத்தில் வைத்தார். அதனால் விஷ்ணுசித்தர் எனும் பெயரொடு விளங்கினர் பெரியாழ்வார்.

பனிக்கடலில் பள்ளிகோளைப் பழகவிட்(டு) ஓடிவந்து, என்
மனக் கடலில் வாழ வல்ல மாய மணாள நம்பீ!

என்று பாடிப் பரவசம் கொள்ளும் பரமபக்த சிகாமணி அவர்.

அவருடைய பக்திப் பெருக்கில் உருவான சொல்பெருக்கம்

தென்பழனி மெய்த்துரையே தெய்வ ஒருமொழியால்
என்னை உய்விக்க என்றென்முன் நேர்வோயோ.

இப்பிரபந்தம். தன்னைப் பிறன்போல் வைத்து, ஆழ்வார் குறிப்பாகச் சில செய்தி கூறுகின்றார்; அதையும் கேளுங்கள்!

தானும் தூயவன். தன்னைச் சார்ந்தார்க்கும் தூய்மை தருபவன். மேலான பரமபதத்தில் மிளிர்பவன். பக்தர்களைப் பகைத்தாரைப் பரந்தாமா! காட்டு! அவர்களைக் காட்டு!! என்று விம்மி எழும் வில்லை, அடக்கி ஆள்பவன் அந்த அம்மான்.

பயன் தரும் அப்பரமனை எண்ணிப் பாடியது இப்பல்லாண்டு. எவர்க்கு நல்ல காலம் பிறக்கிறதோ, அவர்கள் இதனைப் பக்தியொடு பாராயணம் பண்ணுவர்.

அதன் பயனுக, அந்திம தசையில் காலனைப் புறங் காண்பர். அதன்பின் அரிய பரமபதத்தை அடைவர். அங்கு என்றும் திருமாலைச் சேவித்து இருப்பர் எனும் பொருள்பட வருகிறது நிறைவுப் பாசுரம்; ஆ! என்ன அருமை !

பல்லாண்(டு) என்று பவித்திரனைப், பரமேட்டியை, சார்ங்கம் என்னும்
வில் ஆண்டான் தன்னை, வில்லிபுத்தூர் விட்டு சித்தன் விரும்பிய சொல்;
நல் ஆண்(டு) என்று நவின்றுரைப்பார், நமோ நாராயணு என்று,
பல்லாண்டும் பரமாத்மனைச் சூழ்ந்திருந்(து) எத்துவர் பல்லாண்டே.

(பொ - ரை.) தூய்மையுடையவன்; பரமபத நிர்வாகன்; ஸ்ரீ சார்ங்கம் எனும் வில்லை அடக்கி ஆள்பவன் ஆன ஆதிமூர்த்தியை, (உளம் கொண்டு), ஸ்ரீ வில்லிபுத்தூரில் அவதரித்த பெரியாழ்வார் அன்பொடுபாடிய சொற்கூட்டமான இப் பிரபந்தத்தை, நற்காலம் நமக்கு உற்றதென்று நயந்து என்றும் பாராயணம் செய்பவர், பரமாத்மா எனும் பகவானை வலம் வந்து, நமோநாராயணுய என்று எக்காலத்தும் மங்களா சாஸனம் செய்யப் பெறுவர், (எ - று).

பரமேஷ்டி-உயர்ந்த இடத்தில் உறைபவன் எனும் பொருளது.

பாசுரத்தில் குறித்தபடி பணி செய்வம்; இதைவிட வேறு உயர்ந்த பேறு உளதோ என்று உணர்கிறது நம் உள்ளம். பாடிக் கொடுத்தார்; பாடுவார்க்கு நேரும் பயனும் சொன்னர். இதை விட வேறு என்னதான் செய்ய முடியும்? உணர்ந்தவர்க்கு இருக்கின்றது உய்தி. ஆன்றோர் அருளுதலை அயர்த்து மறந்தாரை ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும்!

வாழ்க பெரியாழ்வார்!

வாழ்க உலகம்!!

திருப்பல்லாண்டு நிறைவு பெற்றது.

என்னை யளித்த என் தாய் பொன்னுட்டு மகள்
உன்றன்னை ஊக்குதலை உணர அருள் என்னுளமே.

கந்தர் அநுபூதி -6

(கி. வா. ஜ.)

இதைத் தாயுமானவர் சொல்லுகிறார். "எம்பெருமானே, என்னுடைய அப்பா!" என்று ஆர்வத்தோடு பேசுகிறார். "பல காலம் தான் ஈட்டிவைத்த செல்வத்தைத் தன்னுடைய குழந்தை முயற்சி பண்ணுமலே பெறும்படி செய்கிற தந்தையைப் போல, மிகவும் உழைத்து இறைவனுடைய திருவருளுக்காக ஏங்கிக் கிடந்து அநுபவம் பெற்ற நீ, அந்த மாபெரும் செல்வத்தை எளிதிலே நாங்களெல்லாம் பயனடையும்படி கொடுக்கிருயே. உன்னைக் காட்டிலும் தந்தை வேறு யார் இருக்கிருர்கள்?" என்று பேசுகிருர்.

"ஐயா அருணகிரி அப்பா உனேப்போல
மெய்யாக ஓர்சொல் விளம்பினர் யார்?"

என்று கேட்கிருர். எவ்வளவோ பேருக்கு விளம்ப வேண்டும் என்ற ஆசை வந்தது. வயசான பிற்பாடு ஒரு சங்கித வித்துவான் சிக்ஷை சொல்லித் தந்தால் மேல் ஸ்தாயி எட்டாமல் கையைக் காட்டுவான். அதுமாதிரி அநுபவத்தைச் சொல்ல வேண்டுமென்று ஆண்டவனுக்கு ஆசை வந்ததாம். தக்ஷிணு மூர்த்தியாக வந்தான். சொல்ல முடியவில்லை; கையைக் காட்டி விட்டான்; சின் முத்திரையினலேயே காட்டி விட்டான். மற்றவர்களோ சொல்ல முடியாது என்று ஏங்கிப் போனுர்கள்.

"சாற்றறிதென்று ஏசற்ருர் தன்னே ஆய் முக்கண் எந்தை
நாற்றிசைக்கும் கைகாட்டி ஞன்"

ஆதலினல், "ஐயா அருணகிரி அப்பா உனேப்போல மெய்யாக ஓர் சொல் விளம்பினர் யார்?" என்று கேட்

மங்கைமா ரென்னன்னை மறவர்மகள் தூண்டுதலைப்
புங்கமுடன் என்புந்தி புரிந்துகொண்ட புண்ணியனே.

கிறார். "அருணகிரிநாதர் எதை விளம்பினர்? எதை நினைத்து இப்படித் தாயுமானவர்" சொன்னர்? என்று உடனே கேள்வி எழுந்து விடுமே. அதற்குச் சாவியாக வேறு பாட்டு ஒன்று சொல்லுகிறார்.

"கந்தர்அநு பூதிபெற்றுக் கந்தர்அநு பூதிசொற்ற
எந்தைஅருள் நாடி இருக்கும்நாள் எந்நாளோ"

அப்பா என்று முன் பாட்டிலே பொதுவாகச் சொன்னர். இங்கே 'என்னுடைய அப்பா' என்று சொல்லுகிறார்.

எந்தை-என் தந்தை. யார்? அருணகிரியாராகிய தந்தை. எதனலே தந்தை? கந்தர நுபூதியாகிய செல்வத்தை எனக்குத் தந்தார். அதனலே அவர் எப்படிச் சம்பாதித்தார்? இறைவனுடைய அநுபவத்தைப் பெற்று அநுபூதி பாடினர்.

கந்தர் அநுபூதி என்று பெயர் வைத்தால் மட்டும் போதாது. அந்த அநுபூதியிலே அநுபூதி மணக்க வேண்டும். கந்தர் அநுபூதி பெற்று, கந்தனுடைய திருவருள் அநுபவத்தைப் பெற்று, அவ்வாறு பெற்ற அருமையினல், அதனல் உண்டான இன்பப் பொங்கலினலே கந்தர் அநுபூதி சொற்றார். "அப்படிச் சொன்னவர் என்னுடைய அப்பா அருணகிரிநாதப் பெருமான். அவருடைய அருளை நாடி நானும் அமைதியாக அந்த அநுபூதிக்குள்ளே தோய்ந்து இருக்கும் நாள் வருமா?" என்று எண்ணுகின்றார். நான் ஏங்கினலும் அல்லது நீங்கள் ஏங்கினலும் அது ஒரு பெரிதல்ல. அநுபூதிக்காகத் தவங் கிடந்து, மௌனியாகிய ஒரு பெரிய குருவை அடைந்து, பார்க்குமிடம் எங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூரண ஆனந்தத்திலே லயிக்க வேண்டுமென்று ஆசைப்பட்டு, உலக

சத்துருவே இல்லாமல் ஞயநடனம் நீ செய்வை
மித்துருவை வேலுருவா மென்கையில் கொள்வாயோ.

நிலையினின்றும் பிரிந்து உள்ளத்துறவு பெற்ற தாயுமான சுவாமிகள் அப்படிச் சொல்லுகிறாரென்றால் நாமா அதற்கு மதிப்புரை தனியே வழங்க வேண்டும்? அந்த அநுபூதித் தோய்விலே, அந்த அநுபூதிச் சுவையிலே, அந்த அநுபூதித் தனி மௌனத்திலே தாயுமானவருடைய உள்ளம் கிடந்து அமைதி பெற்றது. இந்த மாதிரி ஒரு பாட்டை நான் பார்த்ததில்லையே என்று சொல்லுகிறார். பல பாட்டைப் படித்தவர், பல அநுபூதி மான்களுடைய பெருமைகளை யெல்லாம் கண்டவர் அவர். அநுபூதிமான்களைக் குறை கூறவில்லை. ஆனால் அவர்களுடைய பாடல்கள் நம்முடைய நெஞ்சை அநுபூதி தொட்டதுபோல தொடவில்லையே என்றுதான் சொல்லுகிறார்.

கந்தர் அநுபூதி பெற்ற ஒருவர் அந்த அநுபூதியைச் சொன்னார். அவர் ஒரு சொல் சொன்னார். அந்தச் சொல்லைப்போலச் சொல்லுவதற்கு மற்றவர்களுக்கு ஆசை இருந்தது; கருணை இருந்தது; அதற்கு அடிப்படையான அநுபவம் இருந்தது. ஆனால் நமக்குப் பாக்கியமில்லை. அவர்களால் சொல்ல முடியவில்லை. நமக்கு இப்பொழுது பாக்கியம் உண்டாயிற்று. அருணகிரிநாதர் பிறந்த பிற்பாடு பிறக்கும் பாக்கியத்தை அவர் அநுபூதி பாடிய பிறகு பிறந்து அதைப் படிக்கும் பாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம். நாற்றிசைக்கும் கை காட்டும் தக்ஷிணாமூர்த்தியின் எதிரிலே, சாற்றரிது, சாற்றரிது என்று ஏக்கமுற்ற வையகத்தாருக்கு முன்னாலே, அருணகிரி நாதராகிய அப்பா எல்லாரும் சொல்லாத சொல்லைச் சொன்னார். அந்தச் சொல் எது? கந்தர் அநுபூதி பெற்றுப் பாடிய கந்தர் அநுபூதி. தாயுமானவரே மதிப்புரை கொடுக்கும் அந்த நூலை நாம் வாசித்துப் பயன் பெறலாம் என்பது வெறும் சம்பிரதாய வார்த்தையா?

பந்தித்த பந்தமெலாம் பாற்றும் குணமயில்தான்;
வந்தித்த என்மனமவ் வகையறிந்து கொண்டதுவே.

அமிருத மொழி

(ஸ்ரீவத்ஸ ஸோமதேவசர்மா)

மதாலசா எனும் மாதரசி மகன் அவர்களுக்கு உபதேசிப்பதாக, வித்தியா நிதி வியாஸ பகவான் மார்க்கண்டேய புராணத்தில் கூறுகிருர்.

தானம் என்பது பெருந் தவம். இதற்கு ஈடான தருமம் வேறில்லை. எல்லோரும் கொடுக்கலாம். எல்லோருக்கும் கொடுக்கலாம். எப்போதும் கொடுக்கலாம். எல்லாவற்றையும் கொடுக்கலாம். கொடை கீர்த்தியைத் தரும். மறுபிறவியில் பன்மடங்காக வரும். ஸுவர்க்கந் தரும். ஸுகம் தரும். கொடையாளியை நாடி அனைவரும் வருவர். பொருள் தருவது உயிரையே தருவதாகும். உயிரைக்கூட விட விரும்புகின்றனர் பொருளுக்காக. போர் வீரர் பொருளுக்காகவே படையில் சேருகின்றனர். அத்தகைய பொருளைத் தருவதே தவம் என வேதம் கூறுகிறது.

கஷ்டப்பட்டுத் தேடிய தனத்தை மனமாரத் தருவது எளிதான காரியமல்ல. நல்ல பாத்திரத்தில் நல்வழியால் தேடிய நல்ல பொருளை நல்ல காலத்தில் நல்ல மனதுடன் கொடுப்பதே கொடையாம். அதனுல் பயனில்லை என்றுலும் தானமே சிறந்தது. பகைவனும் தானத்தால் நண்பன் ஆவான். தானம் செய்த பின் மனத்திற்கு உண்டாகும் அமைதி வேறெதனுலும் உண்டாகாது. வேள்வி தானம் தவம் இவைகள் மிகப் பாவநமானவை. ஆத்மத்யானத்திற்கு ஸாதநமானவை. நீ தனத்தை மாத்திரம் தரவில்லை. தனத்துடன் உனது பாபத்தையும் தருகிருய்.

அதை வாங்குபவர் நமது பாபத்தை அகற்ற சக்தி உள்ளவராக இருக்க வேண்டும். பிராணுயாமமும் காயத்திரி

அப்பனுநீ அம்மையுநீ ஐயனும்நீ என்றென்றே
இப்புவியில் கூவுமெனை யீர்த்தணைக்க வாராயோ.

யுமே ஸகல பாபங்களேயும் போக்கவல்லது. ஆதலால் தானம் வாங்குபவர் காயத்திரீ ஜபம் செய்பவராக இருக்க வேண்டும். நம் பாபத்தையும் அவரது பாபத்தையும் போக்கக்கூடிய மஹா மந்திரமது. காயத்திரி ஜெபம் செய்யாதவனுக்கு அளிக்கும் தானம் கல்லேக் கட்டிக்கொண்டு நீரில் இறங்குவது போலாம்.

பசி என்று வருபவர் அனேவரும் அன்னமளிக்க பாத்திரமேயாவர். பசித்தவருக்கு உணவு அளிக்காவிடில் அவர் செய்த பாபம் நமக்கும் நாம் செய்த புண்ணியம் அவருக்கும் செல்லும். அன்னம் அளிக்காதவன் புண்ணியத்தை இழப்பதுடன் அவனது பாபத்தையும் பெற வேண்டும். உண்பதற்கு முன் ஒரு பிடி எவருக்கேனும் அளி. காக்கைக்கேனும் சிறிது அன்னமளித்துப் புசி. உனது அன்னத்தைப் புசித்துப் பசுவைக் கொல்பவனுக இருந்தால் அவனுக்கு மாத்திரம் அன்னமளிக்காதே. அவன் பாபத்தில் உனக்கொரு பகுதி வரும். அன்னதானம், அறிவு தானம், வீடு தானம், பூதானம் இவை மஹா தானங்கள். மஹா தானம் செய்பவர் பிரும்மலோகஞ் செல்வர். (மஹா தானபுரம் மஹா தானம் தெரு இவை மஹா தானத்தா லுண்டானவை.)

சிரத்தையுடன் கொடு. அசிரத்தையுடன் கொடாதே. எப்படியாவதுகொடு. கொடையே முக்யம் எனத் தைத்திரீய உபநிஷத் கூறுகிறது. நல்ல பொருளேக் கொடு. நீ எதை விரும்புவாயோ அதையே கொடு. நாம் கொடுக்கிறோம் என்ற கர்வத்துடன் கொடுக்காதே. அப்படிக் கொடுத்ததால் தான் மஹாபலி அழிந்தான். வாங்கியவரோ மிக ஸத்பாத்திரம். மஹா விஷ்ணு! காலமோ அசுவமேதமெனும் மஹா வேள்வி! பொருளோ மஹா தானங்களில் ஒன்றுன பூமி! இவைகளில் ஒவ்வொன்றுமே சிறந்த பயனேத் தருபவை. எல்லாம் சேர்ந்தது அவனுக்கு. அழிவற்ற சாச்வதமான பயனன்றே உண்டாக வேண்டும்? பாசத்தால் கட்டப்பட்

ஆதரிக்கும் வள்ளல் உனேயன்றி யாருமிலே
வாதமகல் வேதகிரி வரதா அருளாயோ.

டான்! பாதாளத்தில் தள்ளப்பட்டான்! மண்ணையும் விண்ணையும் இகழ்ந்தான்! ஏன்? கர்வம்! கர்வம்!

வெட்கத்துடன் கொடு. ஸத்பாத்திரம் கிடைக்குமா? நாம் கொடுப்பது மிகச் சிறியது என வெட்கப்படு. மூவுலகும் வாமனரது அடிக்கு ஈடாகவில்லை. அந்தத் திருவடியை மனக் கோயிலிலே வைத்து வணங்குபவருக்கு வையகமெலாம் ஒரு அணுவளவே யாகும். நீரில் தவங் கிடந்தார் ஒரு முனிவர். மீன் என எண்ணி வலையில் சிக்கிய அவரைக் கரைக்கிழுத்தான் செம்படவன். முனிவரென அறிந்து நடுங்கினன். காலில் விழுந்தான். மன்னிப்புக் கேட்டான். உங்கள் ஆசை வீணாயிற்றே என முனிவர் வருந்தினர். இந் நாட்டு மன்னனிடம் சென்று எனக்கு ஏற்ற பொருளை வாங்கிச் செல். அதை என்னிடம் காட்டிச் செல் என்றார் தவஸி.

தவச் செல்வர்க்கு மன்னரே பணப் பெட்டியாம். செம்படவனுக்கு இது போதாதா என அரசன் ஆயிரம் பொன் தந்தான். ஒரு பவுனை முழுவதாகக் கண்டிராதவன் ஏழை செம்படவன். ஆனந்தக்களிப்புடன் ஓடோடி வந்தான் முனிவரிடம். தங்களால் போதிய பொருள் கிடைத்தது! இனி தங்கள் அருளே வேண்டும் என்றான். மஹரிஷி, "இதை மன்னனிடமே திருப்பிக் கொடு. இவ்வளவு தானா பொருவேன் நான்" என்று கேள் பூபதியை என்றார். கிடைத்த பொருளைத் திருப்ப மனம் வரவில்லை. ஆயினும் முனிவர் ஆணை. அதிகமும் கிடைக்கலாம் என அரசனிடம் சென்று கூறினன்,

லக்ஷம் கோடி பொன். ராஜ்யமனைத்தும் ஒவ்வொன்றாகத் தந்தும் "இவ்வளவுதான் பொருவேனா" என்றார் தவஸி. என் செய்வது? மன்னன் விழிக்கிறான். நீரே கூறும். எவ்வளவு பொருவீர் என்றாலும் அவர் சொல்வதில்லை. அமைச்சர் அலறுகின்றனர். குருவைச் சரணம் அடைந்தான்.

ஆறுமுகத் தேவேநிற் கயலா எதுவுமில்லை
வேறுபொருள் வேண்டேன், நீவேண்டும், அருளுதியே

வேந்தே! வேதமறிந்த வேதியனிடம் ஸகல தேவரும் வசிப்பதை அறியீரா? பொன்னும் பொருளும் அவருக்கு ஈடோ? அவரைப்போல் தேவர்க்கெல்லாம் ஒரே இடமான ஒரு கோவைக் கன்றுடன் தாரும். இவ்விரண்டுமே சமம் என்றார் ஆசாரியன்.

ஆதலால்தான் "வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்" என்ற தமிழ் மறை தோன்றிற்று. வேதியர் உத்தரவு பெற்றே வைதிக கர்மா துவக்க வேண்டும். உத்தரவு பெறுவதற்குமுன் அவரை ஆராதிக்க வேண்டும். பொருளைத் தந்து அருளைப் பெறுவதே முறை. ஆதலின் யான் அளிக்கும் "யத்கிஞ்சித்", ஏதோ கொஞ்சம் பொருளைப் பெரிதாகக் கருதி அருள்புரிய வேண்டும் எனக் கேட்கும்படி விதி கூறுகிறது. பொன்னை தக்ஷிணை தந்தாலும் இதே மந்திரமே கூற வேண்டும். ஆதலால் நீ அளிப்பது அவர்களது யோக்கியதைக்கு மிகச் சிறியதே. ஆதலால் வெட்கப்பட்டுக் கொண்டு கொடு என்றது சுருதி.

ஒரு தினமேனும் தானமின்றி கழிக்காதே. என்று நீ தானம் செய்யவில்லையோ அந்த நாள் வீணான நாள். பிறவா நாள். ஏதேனும் சிறிது கொடு. பொருளிருப்பவர் மேலும் மேலும் இப் பிறப்பிலும் மறுபிறவியிலும் செல்வம் பெற தானம் செய்ய வேண்டும். போதிய தனம் இல்லாவிடினும், ஏழையாயினும், தானம்செய்யாததால் ஏழையானேம். இனி கொடுத்து தனிகனுவோம் என்று அவனும் தானம் செய்ய வேண்டும்.

தேகி கொடு என்று கேட்பவன் முற்பிறவியில் கொடாததால் என் கை கீழே. கொடுத்ததால் உமது கை மேலே இருக்கிறது. கொடுக்காமலிருந்து என்னைப்போல் ஆக வேண்டாம் என பாடம் கற்பிக்கிறன்! கொடு! நித்தியம் கொடு!! சிறிதாவது கொடு!! எதையேனும் கொடு!! ஸத்பாத்திரத்தில் கொடு !! இல்லை என்று மாத்திரம் கூறுதே!!

புத்தியுளார் சித்திபெற இல்லாதார் பொன்னுலகில்
முத்தியொன்றே வேண்டெற்கு முன்னின் றருடியரோ.

திருமுருகன் திருவிளையாடல்

(V. R. G.)

உளமறிந்து படியளக்கும் பெருமான்!

மிருகக் காக்ஷி சாலையில் அநேக வித மிருகங்களை வைத்து வளர்க்கிறார்கள். நம் அறிவு வளர்ச்சிக்குக் காரணமாயுள்ள இயற்கை உண்மைகளை நாம் அறிந்து தெளிவு பெறவே அவைகள் நாம் வசிக்கும் நகர் மத்தியில் அமைந்துள்ளன. மிருகங்களுக்கு அதன் உருவத்திற்குத் தகுந்த கூடு அமைப்பதில்லை. அதன் குணத்திற்குத் தகுந்த கூண்டே அமைக்கிறார்கள்.

யானை ஒட்டகைச் சிவிங்கி முதலியவைகள் உருவத்தால் பெரியதாயினும் சாந்த குணமுள்ளவைகள். ஆதலால் அவைகளுக்கு அதிக காபந்தில்லாத இடமாய் அமைக்கிறார்கள். குள்ள நரி ஓநாய் சிறுத்தை முதலியவைகள் உருவத்தால் சிறியதாயினும் மூர்க்க குணமுள்ளவைகள். ஆதலால் அதற்குக் காவல் நிறைந்த வலுவுள்ள கூடாய் அமைத்து அதன் சுதந்திரத்தை ஓரளவு கட்டுப் படுத்தி வைத்திருக்கிறார்கள்.

இதேபோல் திருமுருகர், மனிதனுக்கு அவன் குணத்திற்குத் தகுந்த படி பந்தத்தையும், பிராரத்வ வினை நிறைந்த சுக துக்கத்தையும் அளந்து கொடுத்து வருகிறார். நற்குண முடையோன் அவன் செய்கையால், இகபர சுகத்தையும், துற்குண முடையோன் அவன் வினைக்கேற்ப பலனை அனுபவிக்கச் செய்து இடைவிடாது காவல் புரிந்து வருகிறார். என்னே அவர் கருணை!

அப்பாஎற் காறுதல்தா ஆன்மானு பூதியிளி
இப்பாரில் வேறெதுவும் வேண்டேன்மெய் எம்மானே.

மெய்க்காவல் புரிகின்றான் திருமுருகன்!

நம் தேகத்தில் ஒரு காயம் உண்டானால் நமக்கு மிக நோவு உண்டாகிறது. காயத்திலிருந்து உதிரம் வெளி வருகிறது. உடனே புண்ணின் வெளிப்புற முள்ள உதிரம் குளிர்ந்த காற்றால் கெட்டியாகி அந்தக் காயத்தை மூடிக் கொள்கிறது. நம் தேகத்திலுள்ள உதிரம் வீணாய் வெளியே போகாமல் தடுப்பதுடன், வெளிக்காற்றிலுள்ள விஷக் கிருமிகள் அப்புண் வழியாய் நம் உடலுள் புகுந்து நோய்களை உண்டுபண்ண விடாமல் தடுக்கின்றது.

நாள் ஆக ஆக அதன் மேலே மூடியுள்ள தசை கெட்டியாகி, அந்தப் புண் பூரா குணமாகும் வரை காவல் புரிகிறது. காயமானதும் அரைவாசி ஆறினவுடன் அதன் வலியும் குறைகிறது,

அச்சமயம் அந்தக் காயத்தின் மேல் பொருக்கை எடுக்க முயன்றால் நோவு உண்டாகிறது. என்வேலை பூரா முடியும் வரை நான் இங்கு விட்டு வரமாட்டேன் என்கிறது புண். ஆறி அதன் வலியும் குறைந்து விட்டதே! இனி அந்தப் பொருக்கிற்கு என்ன வேலை என நாம் எண்ணுகிறோம். அதிலும் ஒரு கடமை ஒளிந்து நிற்கின்றது.

புண் ஆறிவிட்டது ஆயினும் அதன் மேலுள்ள தோல் இன்னும் உறுதியடைய வில்லை. அது உறுதி யடையாத சமயம் மறுபடி அதன்மேல் ஏதாவது பட்டால் மறுபடி காயம் ஏற்பட்டு மிகத் தீமையை விளைவிக்கும் ஆதலால், அதுவரை நான் இங்கிருந்து திருமுருகன் இட்ட கட்டளைப் படி நடப்பேன். நான் மெய்க் காவலாளி! திருமுருகன் ஏவலாள்!

மேல்தோல் உறுதியடைந்து விட்டால் நான் உன்னிடமிருந்து மகிழ்ச்சியுடன் விடை பெற்று கொள்ளுவேன் என்று சொல்வது போல், அது தன் பணி முடிந்த

ஞானசிகாமணிநீ நன்மணிநீ சுப்ரமணி
ஞானவான் காட்டியதில் நானேற அருளுதியோ.

வுடன் தானே நமக்கு ஒரு சிரமமும் கொடுக்காமல், காயத்தி லிருந்து நீங்கி விடுகிறது. நாம் அது செய்த நன்றியை நினைப்பது மில்லை. அவ்வாறு நமக்கு உதவி செய்யும்படி ஏற்பாடு செய்த திருமுருகன் கருணையை நினைந்து அதற் காக நம் நன்றியை அன்பு மூலம் தெரிவித்து, சதா அவர் துதியைப்பாடி வழி படுவோம்!

திருமுருகன் திருக்கோவில்.

காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் என்பது முதியோர் வாக்கு. காத்திருந்து பார்த்தாலல்லோ தெரியும் என்கி றோம். ஆனி ஆடி மாதங்களில் பருவக்காற்று இருக்கும் போழுதே உன் வசமுள்ள தானியங்களை காற்றின் உதவி யால் தூசி, மண், பதர் இவைகளை நீக்கி நல்ல விதைகளாக்கி வைத்துக்கொள் என்பது வெளிப்படையான கருத்து.

அதனுள்ளும் திருமுருகன் ஒரு உண்மையை, நம் அறிவிற்கு விருந்தாய் அமைத்திருக்கிறார்.

நாம் உயிர் வாழ்வதற்கு முக்கியமாய் வேண்டியது உணவு தண்ணீர் காற்று. இவற்றுள் காற்றுதான் மிகவும் முக்கியமானது. காற்றில்லாமல் ஒரு நிமிஷமும் உயிர் வாழ முடியாது. நம்பிராணுதாரமாகிய பிராண வாயுவை நாம் சுவாசிக்கிறோம். தேக வளர்ச்சிக்கும், ஆரோக்கியத் திற்கும் சுவாசிக்கும் காற்றுதான் மிக முக்கியம்.

ஆதலால் காற்றென்பது நம் ஆயுளையே வளர்க்கும் கருவி. நாம் கனமுள்ள ஒரு சாமானைத் தூக்கும் பொழுது நம் ஹ்ருதயத்தில் நிறைய காற்றை அடக்கி வலு வேற்றிக் கொள்கிறோம். அதனால் அதைத் தூக்குவது சுலப மாகிறது. வியாதியாலோ மூப்பினலோ தேகம் தளர் வடையின், நம்மால் ஒன்றும் முடிவதில்லை. சுவாசத்தை அடக்கவும் சக்தி யற்றவர்களாகிறோம்.

அஞ்சவேண் டாம்மனமே ஆறுமுகன் வேலிருக்கச்
சஞ்சலமேன் சீசீ எனுமென்முன் சார்தியரோ.

இதை நாம் உணர்ந்து விழிப்படையும் வண்ணம் காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்! உனக்கு யௌவனமும் வலுவும் உள்ளபோதே, உன் சுவாசத்தை வலுவுள்ள தாக்கி, உன் சுவாச கோசங்களிலுள்ள நோய் நொடிகளை, காற்றின் உதவியால் தூற்றி, ஹ்ருதயத்தை வலுவுள்ள தாக்கிக்கொள். சுவாசத்தின் வலுவே மனோ நிம்மதியின் ஆதாரம். மனோ நிம்மதியும் சுவாசத்தின் வலுவும் உயிரும் உடலும்போல் ஒன்றை யொன்று பிணைந்து நிற்கும்.

நம் முன்னோர்கள் வகுத்துள்ள நித்திய விதியே, நம் பிராண வாயுவையும் சுவாசத்தையும் வலுவுள்ள தாக்கிக் கொள்ள வழி செய்கிறது. பரிசுத்தமும் வலுவும் நிறைந்த நம் ஹ்ருதயமே திருமுருகன் மகிழ்ந்தமரும் திருக் கோவிலாகும். திருமுருகன் நம் ஹ்ருதயத்தில் அமர்ந்த பின் நமக்குத் தேவை என்பதொன்று மில்லை!

சிவநேயச் செல்வர்கள் 12

கயல்கண்ணியார்

(ரசபதி)

வாழும் வழி

காணவும் கருதவும் உரியது கல்யாணபுரம். அப்பதியை ஆற்றூர் என்றும் அறிவிப்பர். மண்ணியாற்றங்கரையில் உளது இம் மாபெரும் பதி. வாய்மை மறையவர் பலர் அங்கு வாழ் கின்றார். உயர்ந்த அவர்களுள் ஒருவர் உத்தமதானர். அவர் கலைகள் பலவும் கற்றவர். வைதிக ஞானம் பெற்றவர். சிவபக்தி யுற்றவர். மங்களம் எனும் மனைவியுடன் இல்லற நல் லறம் ஏற்றவர். கனிவு மிக்க இவர் மகள் கயல்கண்ணி.

அவ்வூர் நடுவில் ஒரு ஆலயம். மந்தார மரம் தல விருட்சம். ஆதலின், மந்தார வனேசர் என்பது நம்பரது நாமம். மண்டுகம் என்னும் தவளைக்கும் பேறளித்த இத்தலத்தில், இறுதி நாளில்

அண்டும் உறவினர்கள் அண்டா தகலுறுநாள்
விண்டழைக்க வாய்குழறும் உள்ளமுனை விள்ளுமரோ.

ஐந்தெழுத்தைச் செவியில் ஓதுகின்ற அம்பிகைக்கு, அஞ்சனக்கண் அம்மை யென்று பெயர்.

பேசப் பழகிய நாள் முதல், கயற் கண்ணி தந்தை மடியில் தங்கி வளர்ந்தாள். கற்கத் தக்க கலைகளை அவரிடமே கற்றாள். ஆலயம் செல்லும் போதெல்லாம், அஞ்சனக்கண் அம்மையையும், மந்தார வனேசரையும் மாறி மாறிப் பார்த்து மகிழ்வாள். தாயே! அடியேற்கு நின் பேறு அருள்! என்று குறிப்பிட்டு விழுந்து தேவியைக் கும்பிடுவாள். மகளின் மன நிலை, தந்தைக்கு மகிழ்வளித்தது. பருவம் எய்தினர் பாவையார்.

உத்தமதானரைக் காண, அந்தணர் பலர் வந்தபடியே யிருப்பர். சிவ ப்ரபாவம், சீவ சுபாவம், ஆணவ அவதி முதலிய வைகளைக் குறித்து, வருவாரிடம் ஓயாது கூறுவதில் அவர்க்கு உவகை. அவைகளைக் கேட்பதில், கயல் கண்ணிக்கு அளவிறந்த விருப்பம். முன்பெல்லாம் முன்னிருந்து கேட்டாள்; இப்பொழுது பெண்மை இடம் தரவில்லை யாதலின், மற்றவர் அறியாதபடி கதவின் பின்புறம் இருந்து காது கொடுத்தாள். நாட்கள் பல இடையில் நகர்ந்தன.

கலை நுட்பம்

எந்தத் தேவர்களும் எம்மைப் போன்ற பசுக்கள்தான். பசுக்கள் பசுக்களை மணப்பதில்லை; மாபெரும் பதியைத்தான் மணக்கின்றன. மந்தார வனேசரே பசுபதீசர். தேவதாந்தரங்களை எண்ணி அறிவு தேய விடுவது சரியல்ல. பன்மை முகத்தில் பயன் இல்லை. தேவதேவேசனை, ஏத்தித் தெளிவு பெறுவதே நேர் நடை. இது உத்தமதானருடைய ஒரு நாளைய பொன்னுரை.

அதைக்கதவின்பின்புறம் இருந்துகேட்ட கயல்கண்ணி இதயம், எதை யெதையோ அப்பொழுது எண்ணியது. இரவு மணி எட்டு.

உணர்ச்சியிற் கிளர்ச்சி

அம்மா! இதை நீயே வைத்திரு! என்று தன் கை முடிப்பு ஒன்றைத் தாய் கரத்தில் தந்தாள். என்ன இது? பதில் இல்லை. அன்னை முடிப்பை அவிழ்த்தாள்.

கயல் கண்ணி! ஏன் கலன்களை எல்லாம் கழற்றினை? மூக்குத்தி கூட முடிப்பில் இருக்கிறதே!

பாரோர்என் ஆதரவு உள்ளவரை பற்றுவரால்
ஆராரோ என்றே அதன்பின்னர் பாடுவரே.

அம்மா! வீணான இவைகள் இப்பொழுது வேண்டா. நல்ல காலம் வரும்போது, அவைகளை நானே வலிந்து அணிந்து கொள்கின்றேன்.

இப்பொழுது நல்ல காலம் அல்ல என்று உனக்குச் சொன்னவர்கள் யார்? பட்டுப் புடவைகள் பல இருக்க, ஏன் இந்த நூல் சேலை? என்னடி யிது? எதற்கும் பதிலில்லை.

உற்றது என்ன என்று பெற்றவட்கும் தெரியவில்லை. ஏக்கம் முகத்தில் தேக்கம் செய்தது. வர வர ஒருவேளை உணவு. உடல் இளைத்தது. என்ன அம்மா செய்தி? எத்தனை தரம் கேட்பது? ஒன்றும் இல்லையே; இவ்வளவுதான் பதில். மகளின் மாற்றத்தை அன்னை மனங்கொண்டாள்.

லௌகிக கீதை

இரவு மணி பன்னிரண்டு. தந்தையும் தாயும் கலந்து பேசினர். கண்விழித்த கயல் கண்ணி, அப் பேச்சுகளைக் கவனித்தாள். தாய்மையில் உலக போதம் தழுவி யிருந்தது.

உங்கட்கு எப்பொழுதும் வேத உபநிடத விசாரணைதான். லௌகிகத்தில் ஒரு கால்; பாரமார்த்திகத்தில் ஒரு பாதம். ஒன்றில் ஊன்றினால் உய்யலாம்; இரண்டிலும் நின்றால் விழுந்து ஒடிவது தான் விளைவு. பருவம் எய்திய பாவைக்குக் காலத்தில் மணம் செய்யக் கருதாமல், இப்படியே இருப்பது இழுக்கல்லவா? செல்வியின் சித்த விகற்பம் தீர, இனியேனும் திருமணத்தில் சிந்தனை செலுத்துங்கள்!

உண்மைதான் மங்களம். மகள் மணத்திற்கு இனி முயல்வேன். அதன் பின்தான் அமைதியை மகளிடம் அறிய முடியும்!

அன்னையும் பிதாவும் பேசிய மொழிகள், மகளின் மனத்தை வாளிட்டு அறுத்தது.

கலையறிவும் நிலையறிவும்

பொழுது விடிந்தது. வைதிக நிலையில் கயல் கண்ணி தந்தையை வணங்கினள். என்ன அம்மா! ஏதேனும் சொல்ல விரும்புகிறாயா? ஏன் உன் முகம் வாடியிருக்கிறது? என்றார் பிதா.

அப்பா! பசுக்கள் பதியை மணந்தே பயனடைகின்றன. இதற்கு அயலான சூழ்நிலையில் ஆகாமியமே அனுபவம். இது புனித தங்கள்

என்றும் துணையாவான் என்னே குறையென்று
ஒன்றும் உள்ளங்கொண் டுணையுணர்தல் ஓராயோ

பொன்மொழி. தங்களிடம் இதைக் கேட்ட அன்று முதல், மந்தார வனேசரையே மணப்பது; அந்நாள் வரும்வரை கன்னிகையாகவே காலம் கழிப்பது; இந்தத் தீர்மானத்தில் இருக்கிறேன். இதற்கு அயலாகி, தாங்கள் என்னைப் புரிந்து கொள்ளாமல் வரன் தேட முயலல் வரண்ட நடை. பயனும் இல்லை. விரும்பவும் மாட்டேன்.

அப்படியா செய்தி! அடடா! புரிந்து கொண்டேன் உன் போக்கை! அன்று நான் சொன்னது ஆகமவுரை. எவர்க்கும் அந்நிலை கைக்கூடுமா அம்மா?

ஆகமங்கள், நுட்பங்களை அறிவிக்கின்றன. எட்டுமா? அநுபூதி கிட்டுமா என்று தூரம் போவது! ஆண்டவன் நம்மை ஆள்வான் என்று வாய்ப்பறை மட்டும் கொட்டுவது! என்ன அப்பா இது? ஏட்டுச் சுரைக்காய் நியாயம் என்பது இதுதானோ?

நன்றாகப் பேசுகிறாய் குழந்தாய்! பேசுவது எளிது; அதைச் செயலில் கொணர்வதுதான் மிக அரிதாகி யுளது. மேலும் மலையத் துவச மன்னவனோ நான்? உன் அன்னை காஞ்சன மாலையா என்ன? அவ்விருவர்தம் தவ மகளான மதுரை மீனாட்சி யென்று உன்னை மதிக்கின்றாய்? நாம் வேதம் ஓதும் வேதியர் பரம்பரை; இதை மறவாதே அம்மா!

மலையரசன், மேனையுடன் செய்த இன்பத் தவத்திற்கு இரங்கி, வாழ்விக்கும் உமை மகளாகி வந்தாள். பரமன் அப் பார்வதியை மணந்தான். சிறந்த நூற்கள் உரைத்த செய்தி யிவை. அவைகளை அனுபவ வாழ்க்கை ஆக்க நம்மால் ஆகுமா? எண்ணிப் பார்!

அப்பா! முன் சொல்லப் பெற்றவர் முடி மன்னர். அடுத்தவர் மலை ஜாதி. இவர்கட்கு மகளாகி வந்தாளை மாதேவர் மணந்தார். அந்தணர் குல மகள் அடியேன். என்னை மணக்க அவர்க்குக் கசக்குமா என்ன?

கயல் கண்ணி! வேள்விக் குண்டத்தில் இருந்து வெளியானார் மீனாட்சியார். மானச தீர்த்தத்தில் இருந்து மலர்ந்தார் பார்வதி யார். அயோநிஜர் அவர்கள். அவர்கள் யார், நாம் யார் என்று அறிய வேண்டாமா? பேதை மதியால் விதண்டை பேசாதே! என்று வெடுவெடுத்து உரைத்து, தந்தை விறுவி[illegible] என்றுசென்றார்.

என்னடி யிது, நீலி வேஷம்! ஏன் அழுகிறா[illegible]? பிஞ்சிலே பழுத் தவள்போல் அவரை எதிர்த்துப் [illegible]சும் அளவிற்குப் பெரியவளாய்

பட்டதெல்லாம் போதும் பழநிமலைக் [illegible]ோவே என்
கட்டமெல்லாம் பாறக் கடைக்கணருள் காணேனே.

விட்டாயா? கடவுளையே மணப்பேன் என்று இப்படி யெல்லாம் பேசினால், உன்னைப் பித்து என்று உலகம் எள்ளும். இன்றோடு இந்த எண்ணத்தை விடு! அப்பா நல்ல இடம் தேடி, இம்மாதத் திலேயே உனக்கு மணம் முடிக்கச் செய்கிறேன் என்று அதிரப் பேசினள் அன்னை.

என்ன இப்படிப் பேசுகிறார்களே இவர்கள்? பசுபதி என்னும் சொற்பொருளை அறிந்தும் அறியாதவ ராவதுதான் ஆன்ம இயல்போ! ஏட்டளவுதானோ இவர்கள் ஞானம்?

விளக்கத்தில் விரக்தி

'சிவனுக்குள்ளே சிவ மணம் பூத்தது'.
'நடுக்ககன்று உன்னோடு நடுவான பஞ்சணையில்
படுத்துறங்க நானுசைப் பட்டேன் பரஞ்சுடரே'

'தானும் நீயுமாய் ஏக போகமாய்
இறுகும் வகை பரமசுகம் அதனையருள் இடை மருதில்
ஏக நாயகா!'

என வரும் இவைகட்குப் பொருள் விரிக்கும் புலமை, கனிந்த இவ் அநுபவத்தில் காலூன்றாமைக்கு யாது காரணம்? சார்ந்த வண்ணம் ஆக்கும் இவர்கள் சார்பு, இனி நமக்கு ஆகாது என்று எண்ணியது இதயம். வர வர எவரிடமும் வாய் திறந்திலள்.

நிமலனை எண்ணி மனம் நெகிழ்ந்தது. என்று நேருமோ எம் பெருமான் தொடர்பு என்று, அழுத கண்ணீர் அருவியெனப் பெருக எப்பொழுதும் தொழுத கையினள் ஆயினள்.

பித்தம் முதிர்ந்தது; பேய்ச் சேட்டை; சித்த விகற்பம்; உன் மத்தமே இது என்று, கண்ட உறவினர் கண்டவாறு பேசினர். தாய் தந்தையர், செய்வது அறியாமல் திகைத்தனர்.

இதய வேண்டல்

மேல் மாடியில் கயற்கண்ணி தனித்தாள்; எவரும் அங்கு வாராதபடி தாளிட்டாள். கோயில் திசை நோக்கிக் கும்பிட்டாள்.

மதுரை கயற் கண்ணியை மணந்தாய். மகதேவா! யானும் கயல்கண்ணிதானே!

வாட்டுகின்ற கர்மங்கள் வழுக்கிவிழச் செய்கிறதே
காட்டியருள் கூட்டி நிழல் காப்புவைத்தால் ஆகாதோ.

வலை வீசி மீன் பிடிக்க வந்தாய், பற்ற முடியாத சுறா மீனைப் பற்றினாய், அதன் மூலம், மீனலோசனியான வலைஞர் மகளை மணந்தாய்! யானும் மீனலோசனிதான்!

ஆடும் திருவடிக்கே அன்பு வைத்த என்னை ஏற்றல் இய லாதோ! நீ சூடும் மாலையை எடுத்து எனக்குச் சூட்டுவதும் ஆகாதோ!

கதறிக் கதறி, வாய் இப்படி வழுத்தியது. குபுக் குபுக்கென்று பொங்கி வழிந்தது கண்ணீர். வியர்த்தது உடலம். வெளுத்தது மேனி. ஒரு நாளா இரு நாளா, எத்தனை நாள் இந்த ஏக்கம் ?

பெருகிய பித்து

ஒரு நாள் தான் வளர்த்த கிளி, பறந்து வந்து தன் கையில் தங்கியது. சிலிர்த்தது சிந்தை. கனிவொடு அதைத் தடவிக் கொடுத்தது கை.

மீனாட்சி கையில் மிளிர்வதுபோல் என் கிளியே !
தானாட்சி செய்ய என் கையில் தங்கினையோ ?
மலைமகளார் கையில் மன்னியது போலே நீ
தலைமகளா என்னை யென்கை தங்க விரும்பினையோ?

என்று பரிவொடு கிளியைப் பாராட்டினள். அதுதானா? பக்தி பெருக, கயல்கண்ணி மேலும் பாடுவதையும் கேளுங்கள் !

ஆலாலம் உண்டானடி அருள் கங்கை யேற்றானடி
மாலானார் காணானடி—கிளியே—என்
மனத்தில் இருந்தானடி!

மாமன்றுள் செய் நடத்தான் மாதுமை யாள் இடத்தான்
வாமன் வருவானென்றே—கிளியே
வாய் திறந்து சொல்லாயடி!

வந்தே உனை மணந்து வாழ்வை யளிப்பானென்றே
சுந்தர வார்த்தை சொல்லி—கிளியே என்
துயரம் தவிர்ப்பா யடி.

என்று கண்ணி பாடிக் கண்ணீர் பெருக்கும் கயல் கண்ணி யைக்கண்ட கிளி, கிள் கிள் என்று கிச்சிட்டது. அது மாபெரும் நல்ல அறிகுறி என்று மகிழ்ந்தது மனம்.

எம்மை உடையான்! மழுப்படையான்! ஆற்றான்! பிறைக் கீற்றான்! களிறு உரித்தான்! புலி பரித்தான்! வனச் சரத்தான்!

ஆதியந்தம் இல்லா அரும்பொருளே! ஏழையெனைச் சோதித்தால் தாங்குவனோ சொல்லாய் அருட்சுடரே.

சிதம்பரத்தான்! ஆள்வான்! வினை கீள்வான் என்று அறிவித்தல் செய்தாயடி-கிளியே! ஆனந்தம்கொண்டேனடி என்று குதித்து மகிழ்ந்தாள் அக்கோதை.

அடுத்த நாள், பறக்கும் பல பறவைகளைப் பார்த்தாள். பதைத்தது மனம். எங்கே போகிறீர்கள்? என்னைப் பாருங்கள்!

இவ்வுலகர்க்கு முதல்வனை மணக்க முடியாதாம்! ஏன் முடியாது? அப்படியானால் என் கதி யாது? அம்மானைப் பிரிந்து இனி அரைக்கணமும் வாழேன்; உங்கட்குப் புண்ணியம் உண்டாகும்!

இருந்தருளும் பெருமானுக்கு என் எண்ணம் எல்லாம் உரையீரே?

என்று கலகல கண்ணீர் பெருக்கி ஏங்குகிறார் கயல் கண்ணியார்.

திருவருள் தீர்ப்பு

காலை ஐந்து மணி. உத்தமதானர் உள்ளே இருக்கிறாரா? கணீரென்று எழுந்தது கனத்த குரல். அதையடுத்து, திடு திடு என்று எழுவர் வீட்டுள் நுழைந்தனர். அதற்குள் நீராடி அநுட்டித்த ஐயர், வைதிகராகி வந்தவர்களை வரவேற்றார்.

என்ன வேண்டும்! யார் நீங்கள்?

ஈஸ்வர ஐயரை எவரும் அறிவர். தங்கள் மகளை, அவர்க்குப் பாணிக்ரகணம் செய்து தர வேண்டும். தடையே சொல்லக் கூடாது. தைம் மாதம் இது! இன்று குருவாரம். நாளை வெள்ளியன்றே திருமணம் நடைபெறும். வாழ்விக்கும் மருகருடன் இன்று இரவே வருகின்றோம்; எங்கட்கு இன்னும் பல பணி யிருக்கின்றன என்று, விரைந்து சென்றனர் வந்தவர்.

மயக்கமும் மருந்தும்

உத்தம தானர்க்கு ஒன்றுமே தோன்றவில்லை. யார் ஈஸ்வர ஐயர்? வந்தவர்கள் முகமும் அறிமுகமானதாக இல்லையே! எல்லாம் பிள்ளை விளையாட்டாக இருக்கிறதே! ஒரு வேளை இவர்கள் உன்மத்தர்களோ? ஓடிப் பிடிக்க எண்ணினர். அம்முயற்சி பயன் அளிக்கவில்லை. கண்ணிற்கு எட்டிய தூரம் நோக்கியும் அவர்கள் காணப்படவில்லை. ஆலயம் சென்றார். வழிபட்டார். அமைதி யடைந்தது மனம். வீடு நோக்கித் திரும்பினர். வரும் வழியெல்லாம் பல ஆயிரக் கணக்கானவர், பந்தல் போடும் பணியில்

ஈராறு கண்ணுடைய எந்தாய் கடைக்கண்ணால்
பாரா திருந்தால் என்வினைகள் பாருவே.

விறு விறுத்து வேலை செய்கின்றனர். ஊரில் என்ன விசேடம்? என்று சிலரை வினவினர். பணி செய்யும் மும்முரத்தில், எவரும் பதில் உரைக்கவில்லை.

தன் அருமை மாளிகையும் அலங்கரிக்கப் படுகிறது. ஆட்களின் அண்மையில் மந்திரியும் சோழ மன்னரும்.

அரசே! என்ன இது என்றார் ஐயர். திடுக்கிட்டுத் திரும்பிய மன்னர், எட்டுறுப்பும் நிலம் தோய இறைஞ்சினர். ஸ்வாமி! மந்தாரவனேசர், என்னையும் ஒரு பொருளாக்கிக் கனவில் எழுந்தருளினர். தங்கள் அருமை மகளை, நாளை காலை மணம் செய்யப் போகிறாராம் நம்பர். ஊரையும், மாளிகையையும் அணி செய்து, மேலும் ஆவன புரிக என்ற பேரருள் கட்டளை பிறந்தது. இப்படி ஒரு பணியில் ஈடுபட வைத்த தங்கள் குடும்பத்திற்கு, என்றும் கடப்பாடுடையேன் என்று தழுதழுத்து உரைத்தார் தரணிபர்.

கண்கட்டு வித்தைபோல் இருக்கிறதே! நனவா கனவா நான் காண்பது? என்ன இது? மாளிகையுள் புகுந்தார். மயங்கி நோக்கினள் மனையாள் மங்களை.

மங்களம்! கயற்கண்ணியை, நம் மகளென்று எண்ணியதே மாபெரும் பிழை. வா வா என்று அழைத்துக் கொண்டு மாடிமேல் ஏறினர். கண்ணுதலை யெண்ணிக் கண்ணீர் சிந்தும் கயல்கண்ணி யாரைக் கண்டார். குவிந்த கைகள், அவரையும் அறியாமல் கும்பிட்டு நின்றன. அதே நிலையினள் மங்களை. தந்தை தாயரைக் கண்டதும், அஞ்சி யெழுந்தாள் அருமை மகள்.

அம்மா! உன்னை யறியாமல் உபத்ரவித்த, மாபெருங் குற்றவாளிகளான எங்களை மன்னித்திடு என்று, விநயமாக இருவரும் விளம்பினர்.

சிவ சிவ சிவ சிவ என்று நகை முகமாயினர் நங்கையார்.

சிவமணம்

இரவு மணி பத்து. ஆற்றூர், கலியாணபு[illegible] மாகவே அ[illegible]ந் திருக்கின்றது. எங்கும் காவணம். எங்கும் தோரணம்.

பிரம ஸ்வரூபமான பெரு[illegible]ான், பிராமண மகனை மணக்கப் பிரமசாரி யானன். சோழர் நடைக் காவணம் இட, அதன் மேல்

நின்னடிமை தன்னை நீமறந்தால் நீதிதரன்
என்னும் பெயர்க்கே இழுக்கு இழுக்கையா.

நடந்து வந்தான் நம்பன். அளவிலாத தேவர்களும் கணங்களும், மானுட வடிவில் மகிழ்ந்து தொடர்ந்தனர். வாழ்த்துரைத்தார் மறையோர். மங்கலம் பாடினர் மடவார்கள்.

காசியாத்திரைச் சடங்கு நடந்தது. மணம் பெறத் தருவன் என் மகளை என்று, வணங்கி யழைத்தார் மாமனார்.

மணமன்றத்தில், மங்கல அணியுடன் மணமகளார் வந்தார். கடைக்கணித்த பெருமானைக் கடைக்கண்ணால் கண்டு களி கூர்ந்த கயல்கண்ணியாரை, அண்மையில் பாங்கியர் அமர வைத்தனர்.

வேள்வித் தீ வலம் சுழித்தது. தாரை வார்க்கும் சடங்கு நடந்தது. மங்கலப் பறைகள் மகிழ ஒலித்தன. வாழ்த்துக்களின் ஒலி வளர்ந்தது. பல்லாண்டு ஓசை படர்ந்தது. மாதேவன், மதிநுதல் மங்கைக்கு மங்கலநாண் பூட்டினன். அம்மி மிதித்தல், அருந்ததி காட்டல் முதலியன முடிந்ததும், இமையா நாட்டம் எய்தினர் தேவியார். கால் நிலம் தோயவில்லை. திருமேனியில், புனித தெய்வ மணம் போர்த்தது. ஆ! என்ன அருமை!

பரிசுப் பேறு

அற்புத விருந்து அனைவரும் உண்டனர். விரும்பிய வண்ணம் திருவடிப் பேறு பெற்றார் சோழேந்திரர். மணம் கண்டு மகிழ்ந்தார் மற்றையோர். உத்தமதானரும் மங்கையையும், மணக் கோலம் எண்ணி உருகும் மாபெரும் தவத்த ராயினர்.

தேவியுடன், திருக்கோயிலுள் நுழைந்தான் தேவதேவன். வணங்கிய கயல்கண்ணியை, உமாதேவியார் வாரி எடுத்தார்.

சிவமண தத்துவம் என்றும் எவரும் பெறுதற்கு உரியவர். இதை நிலவுலகிற்கு உணர்த்திய நீ நீடுவாழி என்று வாழ்த்துரைத்தாள் வரததேவி.

உயர்ந்த தங்கள் அருளிருக்க உயராதார் யாரே என்று கனிந்து போற்றினர் கயல்கண்ணியார்.

ஒவ்வொரு தைம் மாதத்தும் வெள்ளிக் கிழமையில், இத் திருமணத்தை நடத்தி, லௌகிகம் கருவியாக, பாரமார்த்திகத்தைத் தழுவ[illegible] எவரும் [illegible]ம்மானை மணந்து இன்புறுவர் என்பதை, இன்றும் அறிந்து எவர்க்கும் அறிவுறு[illegible] இன்பம் கொள்கிறது ஆற்றூர்!

வாழ்க சிவனடியவர் !

நீமறந்தா யென்றேன் நியதி யறியாதேன்
நீமறந்தா யென்றதுமே தோன்றுவினை நீண்டதுவே.

தீபாராதனை

(சி. வி. சுப்ரமண்யம்)

தீபாராதனை என்பது சோடச உபசாரங்களில் ஒன்று. தீபமும் ஆராதனையும் கூடியது தீபாராதனை யாகும். தீபமானது தான் பிரகாசமா யிருப்பதனால், தன்னை யன்றி பிற வஸ்துக்களை பிரகாசப்படுத்தும் இயல் புடைத்து. தான் சுயஞ் சோதியா யிருப்பதுபற்றி தீப மானது சூரியன், சந்திரன், அக்கினி முதலிய மூன்றிற் கும் நிகராகும். இவை மூன்றும் உலகில் முக்கண் எனப் படும். முக்கண் படைத்தவர் பரமேஸ்வரன். முக்கண், ஆக்கல், அளித்தல், அழித்தல் ஆகிய முத்தொழில் செய்ய வல்லது. முக்கண் படைத்தவரே இப் பிரபஞ்சத்திற்கு மூலகாரணர். ஆக முக்கண்ணனே சிவசொரூபம் என்பர். சிவசொரூபமே சீவசொரூபம் எனச் சுருதி வாக்கியம் கூறு கின்றது.

"சீவன் சிவச் சொரூப மெனதேறி"

—திருப்புகழ்.

தீபமானது பிற வஸ்துக்களை விளக்கிக் காட்டுவதால் தீபத்திற்கு விளக்கு என்ற பெயரும் உண்டு. தீபம் விளங்கு கருவியாகிய சாதனத்தையே விளக்கு என்று வழங்கப் படும். அதுபோல சீவாத்மாவின் ஸ்தானமாகிய தேகத் தையே சீவன் என வியவகாரம் செய்வது உலக வழக்கு.

ஆத்ம சொரூபம் என்றும் சுயம் ஜோதியாய் அழிவில் லாததா யுள்ளது. ஆனால் அனாத்மாவாகிய தேகமோ வெனில், உள்ளிருக்கும் ஜோதியினால் சோபை யுடைத்தாயி னும், அழியக் கூடியதாயு முள்ளது. பெறுதற்கரிய பிறவி யாகிய மானிட தேகம் எடுத்ததன் பயன், பெறுதற்கரிய ஆத்ம சொரூபத்தை உணர்ந்து ஆத்மஞான ஆனந்தம்

மனநொந்த வாழ்க்கையினில் வாய்தவறி வார்த்தைபல
இனமாகி வருகின்ற இவ்வாழ்க்கை வேண்டாவே.

அடைவதுவே யாகும். ஆத்மஞான ஆனந்த அநுபவமே சுவாநுபூதி யாகும். சுவாநுபூதி யானது அறிவை அறிவதுவே பொருள் என்று கூறப்படும். தன் சொரூபத்தை அறிந்து மனம் தெளிவு நிலையடைந்தது எனப்படும்.

விளக்கினை யேற்றி வெளியை யறிமின்
விளக்கினின் முன்னே வேதனை மாறும்
விளக்கை விளக்கும் விளக்குடையார்கள்
விளக்கில் விளக்கும் விளக்கவர் தாமே.

—திருமந்திரம்.

ஆக தீபமானது யாவரும் அடையத்தக்க சாத்தியம் எனப்படும்.

பிறகு சாத்தியம் அடைய சாதனம் அவசியமாகையால், சாதனத்தையே ஆராதனை எனப்படும். ஆராதனை யாகிய சாதனத்தைச் சாதிப்பதற்கு அல்லது அப்பியாசமாகக் கொண்டு ஒழுகுவதற்கு சாதுசங்க சார்பு மிக அவசியம். சாது சங்க சார்பு, அடியார் திருக் கூட்டத்தில் கலந்து மகிழ்தல் ஆகும். இதை ஞான பூமியில் சுயேச்சையாகிய முதல்படி என கைவல்லியம் பேசுகின்றது. அடியார் திருக் கூட்டம் பாராயணம் பஜனம் முதலியவை செய்யுமிடம் அநுபூதி மண்டபம் ஆகும். அநுபூதி மண்டபத்தில் அடியார் திருக் கூட்டத்தில் கலந்து பாராயணம் பஜனம் செய்தலோ, அல்லது சிரவணம் செய்தலோ சுவாநு பூதி அடைய சாத்திய சாதனம் எனலாகும். பஜனத்தின் லக்ஷியம் குருநாதனின் திரு அருளானபடியால், தீபாராதனையின் பயன், தன் சொரூப உணர்வாகிய ஆத்ம ஞான உணர்வில் மனம் மகிழ்ச்சி அல்லது சாந்தி அடையச் செய்யும் சாத்திய சாதனம் என்று தீபாராதனையின் மகிமை கூறப்படுகிறது.

வேதாந்த தீபங்காட்டி— அருள்வாயே.

—திருப்புகழ்.

தீரா வினைதீர்க்கும் தெய்வப் பெருமான்நீ
நேரானல் என்வினைகள் நீருகும் வாழ்வேனே!

மேலும் தீபம் ஆராதனைக்கு இலக்ஷிய வஸ்து என்றும், தீபத்தைக் கொண்டுதான் ஆராதனை செய்ய வேண்டியது என்றும், தீபத்தினால்தான் ஆராதனை முடிவடைய வேண்டுமென்றும், தீபத்திற்கு ஆராதனையே மனச் சாந்திக்கு மூல காரணமென்றும், தீபத்தினின்று ஆராதித்தலே சொரூப ஞானம் அடைய சாதனம் என்றும், தீபத்தினது ஆராதனையே ஆத்ம ஞான லாபம் என்றும், தீபத்தில் ஆராதிக்கும் வஸ்துவே ஆத்ம வஸ்துவாகிய மெய்ஞ்ஞான உணர்வு என்றும், தீபமே ஆராதனையின் சாத்தியம் என்றும், தீபமதைப் பல வேற்றுமைப் படுத்தி கூறப்படுவதின் தாத்பரியம் ஒற்றுமைப் பொருளாய் விளங்கும் ஆத்ம ஞான ஆனந்தமாகிய சுவாநு பூதியே தீபாராதனையின் பயன் எனப்படும்.

விளங்கு தீபங் கொண்டுனை வழிபட—அருள்வாயே.

—திருப்புகழ்)

GOLD MINES.

There are several gold mining companies which extract gold from the bosom of the earth by blasting rocks, and gold is accounted as the most valuable of the metals. Material gold seems now to be concentrated in the United States and this is regarded as a sign of great material prosperity. The Alwars and Siddars of our land have shunned the attraction for material gold and have searched for and obtained spiritual gold from within their bosoms. Every human being is a gold mine. The gold within the mine is the Lord. Arunagiri in his songs says:-

" மின்னே நிகர்வாழ்வை விரும்பியயான்
என்னே விதியின் பயனிங்கிதுவோ
பொன்னே மணியே பொருளே அருளே
மன்னே மயிலேறிய வானவனே !"

Descriptive words indicative of great material value are here found translated to the world of spirit and the Lord becomes to these Saints the highest valued of the things in life.

The Siddars addressing the Lord said

" பொன்னால் பிரயோஜனம் பொன் படைத்தார் தமக்குண்டு
பொன் படைத்தார் தம்மால் பிரயோஜனம் பொன்னுக்கு
[ஏதுண்டு"

The proprietor of the goldmine profits by the possession of gold, but the value of the proprietor to gold is nil. Even so every life derives the highest benefits in life and after, by its owning and enjoying God-head. But the Lord does not stand in need of the life blessed by Him.

The Alwar made yet a higher approach.

" பொன்னைக் கொண்டு உரைகல் மீதே
நிறமெழ உரைத்தால் போல்
உன்னைக் கொண்டு என்னுவகம்பால்
மாற்றின்றி உரைத்துக் கொண்டேன்
உன்னைக் கொண்டு என்னுள் வைத்தேன்
என்னையும் உன்னில் இட்டேன்
என்னப்பா! ருஷீகேசா! என்னுயிர்க் காவலனே!

This is a wonderful verse. The way to test the purity of the gold is to rub it on the rough stone and the shine of the stone indicates the degree of purity of gold. But the Alwar says he rubbed the gold of the God name of the highest

purity on his tongue aud thus was enabled to put the Lord in his heart and himself in the Lord. The value of the singing of the Lord's name was thus brought out. Every man must redeem his life and himself by getting to live, move and have his being in the Lord. The successful approach to this end is the repeated singing of the Lord's name. The Lord's name is but a sound. Sound is the meeting point of the word and its meaning. In the begining was "the word" and that "word" still subsists. The sound symbols of God are the names such as Rama, Krishna, Muruga, Siva, Vishnu, (Mother) Matha and so on. This symbol and the thing symbolised 'Aum' are one and the same. So say the Upanishads. The Nityayuktas are (Satatam Kirthayanthomam)—Constantly singing the Lord's names, So says Lord Sri Krishna. He declares in the Gita that the only way to know Him, to see Him and to enter into His substance is by Bhakti which implies of necessity (1) faith in one Supreme God and His subsistence in all the beings of the World and (2) the passionate longing to reach Him. He is the true Gold worth mining for. All lives are mines, gold mines. May we work each into the mine of his being, and add to ourselves the Gold of the Universal Lord and live and move and have his being in the all-pervading Brahman. Om Tat Sat.

Thiruppugal Mani

தேவர்தொழு தெழும்கருணைச் செல்வனே போற்றி
சிறந்தொளிரும் மங்கள சொரூபனே போற்றி
ஓவறு சித்திகள் அனைத்தும் உதவுவோய் போற்றி
ஒலிகெழு கிண்கிணி பாத சால நூபுரங்கள்
மேவியொளிர் சரணனே போற்றி! மத தாரை
விரவியதிண் கபோலனே போற்றி! நின தருளின்
பாவமொடு பலபிணியும் பம்புவறு மைகளும்
பலவான இடர்களையும் பாற்றுக இன்புறவே!

No.1506
அசோகா
MILD SCENTED
ASOKA
பீடீ
நெ.1506

Coffee

Ours for Quality

RAW, ROAST OR GROUND

GANESH & CO., (MADRAS), LTD. MADRAS

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்

சுவர்ண மாளிகை

A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.

தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்
124, தெற்காவணி மூலவீதி - மதுரை
Tel:—"FAITH" Estd:—1924. Phone:—113

அரிய தெய்வ அருள் நூல்கள்

குகஸ்ரீ. பு. பா. ரசபதி அவர்களின் அருமையான
விரிவுரையுடன்

ஸ்ரீ அருணகிரிநாதர் கந்தர் அனுபூதி	1	0	0
,, 6 திருவகுப்புகள்	1	8	0
ஸ்ரீ பகழிக் கூத்தர் திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ்	2	0	0
ஸ்ரீ குமரகுருபரர் அருளிய கந்தர் கலிவெண்பா	2	0	0
ஸ்ரீ சேரமான் பெருமாள் திருக்கயிலாய ஞானவுலா	2	0	0
ஸ்ரீ ஔவையார் அருளிய விநாயகர் அகவல்	1	8	0
திருவெம்பாவை திருப்பாவை திருப்பள்ளி யெழுச்சிகள்	0	6	0
திருப்புகழ் மாலை (250 பாடல்கள் மட்டும்)	0	12	0
கந்தக் கதம்பம் (பாடல்கள்) பல பிள்ளைத் தமிழுடன்	1	0	0
தேவி தாஸர்கள் (அச்சில்)			
கணபதி பக்தர்கள் ,,			
முருகனடியார் ,,			

அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை 1

Printed by K. V. Jagannathan at the National Art Press,
91, Mount Road, Madras—18
Edited & Published by S. Muthuswami, 54, Bunder St. Madras-1